MUNICIPAL LIBRARY SERVICES, JAFFNA.

as a Newspaper பக்கங்கள் 8 விலை ரூபா: 5-00

Nallur Branch Library


# ஈழநாதம்

The Eelanaatham மக்கள் தினசரி Peoples Daily

தம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 18 01- 06 - 1994 புதன் கிழமை ஒளி 103


## இருநேரமாக பாடசாலை இயங்க ஒத்துழைப்பு வழங்க கோரிக்கை

கல்வி வலயங்களின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைவாக வலயம் இரண்டில் கடந்த ஒரு மாதமாகவும் வலயம் ஒன்றில் இரண்டு வாரங்களாகவும் இரு நேரமாகப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இந் நடைமுறைக்குக் குந்தகம் ஏற்படாதவகையில் செயல்படுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது இச்செய்திக்குறிப்பில் மேலும், பாடசாலைகள் ஒரு நேரமாக நடாத்தப்பட்டு வருவதால் மாணவர்களின் கல்வித்தரம் குறைந்து வருகிறது என்ற பரவலான அபிப்பிராயம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ...ளஉலகத்தவருக்கு ...சியல்வாதிகள் உதவி

[கொழும்பு]

...பில் ப...தாள உல... ...ளிகள் இன்னமும் அர... ...வாதிகளின் நிழலில் ...து வாழ்வதாக ...ல் வட்டாரங்கள் தெரி... ...றன

...கோட்டை சுசந்த, ...வத்தை சுது, கொள் ...டிய சரணபால உட் ...மேலும் பலர் இவ்வாறு ...ல் வாதிகளின் அனுசர... ...ன் தொடர்ந்து வாழ் ...வும் இதனால் இவர்க... ...எதிராக நடவடிக்கை ...கொள்ள முடியாத ...ற்பட்டுள்ளதாகவும் ...ார் தெரிவிக்கின்ற...

இதில் புறக்கோட்டை சுசந்த என்பவர் செத்தி உபாலியுடன் நெருக்கமான உறவுகளை கொண்டிருந்தார் என்றும், இவரை கைது செய்வதற்கு பொலிசார் முயற்சி மேற்கொண்ட போதும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலையீடுகளை மேற்கொண்டு வருவதாக பொலிசார் மேலும் தெரிவிக்கின்றனர்.

தென் மாகாண சபை உறுப்பினர் பிரான்சிஸ்கோ போன்றவர்கள் கடத்தல் தொடர்பான தகவல்கள் வெளிவரும் என்றே இவர்கள் அஞ்சுவதாக தெரிவிக்கின்றனர் இதே

(6 ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு பிரச்சினையே இன்றுள்ள முக்கிய பிரச்சினை

### விரைவில் தீர்க்கப்படும் என்கிறார் டி. பி. விஜேதுங்கா

(கொழும்பு)

இன்று அரசாங்கமும் நாமும் முகம் கொடுத்துள்ள முக்கிய பிரச்சினை வேலையற்ற பிரச்சினை அல்ல வடக்கு-கிழக்கு பிரச்சினையே முக்கிய பிரச்சினை ஆகும். இதனைத் தீர்ப்பதற்கு மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களிடையே நடைபெற்ற கூட்டத்தில் இக்கருத்தை தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; அடுத்த தேர்தல்கள் ஒக்டோபர், நவம்பர் மாதங்களுக்கு இடையே நடைபெறும் என்றும் இதற்காக சகல உறுப்பினர்களும் இதய சுத்தியுடன் கடமையாற்ற வேண்டும் என்றும் எம்மிடையே தோன்றியுள்ள சிறு சிறு சச்சரவை பெரிது படுத்தாது ஐக்கிய தேசியக் கட்சியின் நலனை மட்டுமே மையமாகக்கொண்டு செயல்படுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் நடைபெற்றுள்ள தென் மாகாணசபை தேர்தலில் பொதுஜன ஐக்கியமுன்னணிக்கு கிடைத்த வெற்றி ஓர் மாயை வெற்றி என்றும் இம் மாயை வெற்றி நீண்டு செல்லாது என்றும் இது தொடர்பாக உறுப்பினர் கலவரம் அடையவோ அன்றி பதற்றம் அடையவோ தேவையில்லை என்றும் தெரிவித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வியாழன் மூடப்பட்டிருக்கும்

வாரத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் அனைத்து அவசர அனுமதி வழங்கும் செயலகங்களும் திறக்கப்படமாட்டாது என்பதையும், இவை தவிர அனுமதிக்கான விசாரணைச் செயலகங்களும்,

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும்என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## மேலதிக செலவிற்கு 1100 கோடி பாதுகாப்பு அமைச்சு கோருகிறது

## ...ஐ.தே.க செயலாளரை ...அமைச்சராக்க முயற்சி

(கொழும்பு)

...தேசியக் கட்சியின் ...தைய பொதுச்செய... ...ன டாக்டர் கமினி ...சுகராவை பாராளு... ...உறுப்பினராக நியமனம் ...அவருக்கு சுகாதார ...ச்சர் பதவி வழங்கு... ...திட்டமிடப்பட்டு வரு... ...தெரியவருகிறது

...போது கட்சியின் உப... ...ளராக இருக்கும் ...விமலசேனவை கட்சியின் பொதுச் செயலாளராக நியமனம் செய்யுமாறும் கட்சி உயர்பீடத்தை சேர்ந்தவர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்

தகாம் விமலசேன காமினி திசாநாயக்காவின் மிக நெருக்கமான நண்பர் என்றும் எனவே இவர்மீது காமினிதிசநாயக்காபூரண நம்பிக்கை கொண்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

...திர்கால ஜனாதிபதி காமினி வாழ்க"

## ...பாராளுமன்ற கூச்சலால் ...அமைச்சராவதில் தாமதம்

...ங்கள் எதிர் கால ஜனா... ...யே வாழ்க" என்று ...மையில் பாராளுமன்ற ...பினராக காமினி திசா... ...க்கா பதவிப் பிரமாணம் வது தொடர்ந்து பின்தள்ளப்பட்டு வருவதாக தெரிய வருகின்றது.

மகாவலி அபிவிருத்தி அமைச்சு பிரதி பாதுகாப்பு

## ஆயுத கொள்வனவிற்கு தேவையாம்

[கொழும்பு]

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்தும் யுத்தம் நடைபெற்று வருவதினால் வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டதைவிட மேலதிகமாக ஆயிரத்திநூறு கோடி ரூபா தருமாறு பாதுகாப்பு அமைச்சு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது. இதேசமயம் பாதுகாப்பு அமைச்சின் இக் கோரிக்கைக்கு ஏற்ப நிதி ஒதுக்குவதில் திறைசேரி பெரும் நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்

## விசேட அதிரடிப்படையினர் மக்களிடம் பணம் பறிப்பு

மட்டக்களப்பு மாவட்டம் அம்பிலாந்துறைப் பகுதியிலிருக்கும் அம்பலத்தடி கிராமத்தை கடந்த புதன்கிழமை யன்று சுற்றி வளைத்த அதிரடிப் படையினர் அரசாங்க உத்தியோகத்தர்களை ஒன்று சேர்த்து அவர்களிடமிருந்து சுமார் 14,500 ரூபா பணத்தை பறித்துச் சென்றுள்ளனர். இச்சம்பவம் கடந்த புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் நடைபெற்றுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச் சோலைப் பகுதியை

(6 ஆம் பக்கம் பார்க்க)

...வயத்தில் உறங்கிய

ங்கள் எதிர் கால ஜனா
யே வாழ்க'' என்று
மையில் பாராளுமன்ற
பினராக காமினி திசா
க்கா பதவிப் பிரமாணம்
த போது ஐ. தே. க
ளி ஆதரவாளர் கூச்சல்
ள்ளனர்.
தனால் இவருக்கான
மச்சர் நியமனம் கிட்டு
வது தொடர்ந்து பின்தள்ளப் பட்டு வருவதாக தெரிய வருகின்றது.

மகாவலி அபிவிருத்தி அமைச்சு பிரதி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராகவே இவர் நியமனம் செய்யப்படவுள்ளர் என செய்திகள் வெளியாகியுள்ளது தெரிந்ததே

ண்டிக்குளம் ரயில் நிலைய

# மலசல கூடத்தில் வடிப்பொருள்கள் மீட்பு

ண்டிக்குளம் ரயில் ...ய மலசலகூடப் பகுதி இருந்து சிறிலங்கா ...ணுவத்தினர் இரண்டு கிராம் சி - நான்கு ரக மருந்துகளையும் மின் ...த்தில் இயங்கும் வெடிக்க ...கும் கருவியையும் கண்டு பிடித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

எனினும் இப் பொருள்கள் இங்கு எவ்வாறு வந்தன என்பது குறித்து இதுவரை அறியப்படவில்லை எனவும் மேலதிக விசாரணை நடைபெறுவதாகவும் தெரிய வருகிறது.

# ...பாலியை சந்தித்தது ஏன்? ...செஞ்சிலுவை விளக்கம்

(கொழும்பு)

...ந்த ஒரு அமைச்சரின் ...லது அரசியல் வாதியின் ...ண்டுகேளின் பெயரிலும் ...சொத்தி உபாலியை ...க்கவில்லை. சிறிலங்கா ...டன் செய்து கொள்ளப் ...ஒப்பந்தத்தின் அடிப் ...யிலே நாம் அவரை சந் ...தோம் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கொழும்பு கிளை வதிவிடத்தலைமை பிரதிநிதி டெமினிக் டெடூர் தெரிவித்துள்ளார்

அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சகலரையும் சந்திப்பது தமது கடமையென்றும் இதற்காக சிறிலங்கா அரசாங்கத்துடன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கொடி ஏழலுக்கு மக்கள் ஆதரவு

...மிழீழக் கல்விமேம்பாட்டுப் ...வையின் நிதியத்துக்கான ...டி ஏழல் நேற்றுத் தொட ...து.

...ழ்ப்பாண மாவட்டம் ...தம் முதல் நாள் விற்பனை ...பாக நடைபெற்றதாக ...யப்பட்டுள்ளது இப் ...யிலீடுபட்ட அனைவருக் ...தமிழீழக் கல்விமேம் ...ட்டுப் பேரவையின் கொடி ஏழற் குழுவினர் தமது நன்றியைத் தெரிவிக்கின்றனர்.

கொடிஏழல் நிறைவு நாளாகிய யூன் 6வரை தொடர்ந்து கொடி விற்பனையிலீடுபட்டு அதிக நிதி சேர்த்துதவுமாறும் பொதுமக்கள் அள்ளிக் கொடுத்து பலவித இன்னல்களுக்கு இடையே கல்வி பயிலும் தமிழீழ மாணாக்கருக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

**இதேசமயம் பாதுகாப்பு அமைச்சின் இக் கோரிக்கைக்கு ... நிதி ஒதுக்குவதில் திறைசேரி பெரும் நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.**

யுத்தம் இன்னமும் முடிவிற்குக் கொண்டுவரப்படமுடியாமல் இருப்பதினால், மேலும் ஆயுத தளபாடங்களும், விமானங்களும் கொள்வனவு செய்ய வேண்டியிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இதன் காரணமாகவே வரவு- செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 2200 கோடி ரூபா போதது என்றும், மேலும் 1100கோடி ரூபா தேவை எனவும் பாதுகாப்பு அமைச்சு கோரியுள்ளது

இது குறித்து திறைசேரியின் பிரதம கணக்காளர் தெரிவிக்கையில் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைகள் அதிகரிக்கப்பட்டிருப்பினும் அதற்கு வெளிநாட்டு நிதிகிடைக்க கூடியதாக உள்ளது ஆனால் இதிலிருந்து பாதுகாப்பிற்கு மேலதிக நிதியை ஒதுக்க முடியாது எனவே பாதுகாப்பு வரியை நூற்றுவீதத்தால் அதிகரிப்பதன் மூலமே இந்நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளார்

இவ்வாறு பாதுகாப்புவரி அறவிடப்பட்டால் பணம் அச்சிட்டுவெளியிடுவதைவிடவிரைவாக பொருட்களின் விலை அதிகரிக்கும் என்றும் இதனால் மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாக வேண்டி வரும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது இரு தேர்தல்களைச் சந்திக்க வேண்டியுள்ள நேரத்தில் இது உசிதமானதாக இல்லை எனவும் அரசாங்க வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது

1994 ஆம் ஆண்டு பாது

(6 ஆம் பக்கம் பார்க்க)

சேர்த்து அவர்களிடமிருந்து சுமார் 14,500 ரூபா பண

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஆலயத்தில் உறங்கிய பொதுமகன் மர்ம மறைவு

மட்டக்களப்பு தாந்தா மலைப் பகுதியில் இருக்கும் ஆலயமொன்றில் உறங்கிக் கொண்டிருந்த நாகமணி கோபாலபிள்ளை என்பவர் கடந்த 17-ம் திகதி முதல் காணாமற்போயுள்ளளார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தை என்பதும், 40 வயதை உடையவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சுகாதார அமைச்சரின் ஊழல்கள் வெளியாகின

(கொழும்பு)

சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத்தின் ஊழல் தொடர்பான பல இரகசிய ஆவணங்கள் வெளிவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவரின் அமைச்சினால் கட்டப்பட்டுவரும் கட்டடங்கள், மற்றும் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான ஆவணங்களும் வெளியிடப்பம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா விமானப்படைக்கு பிலிப்பைன்ஸிடமிருந்து ஆலோசனை

## அமெரிக்காவிடம் உதிரிப்பாகங்கள்

(கொழும்பு)

சிறிலங்கா விமானப் படையினர் பிலிப்பைன்ஸிடமிருந்து தமக்குத் தேவையான ஆலோசனைகளைப் பெற்று வருவதாக கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவிக்கிறது. இதற்குப் பெருந்தொகை பணம் செலவிடப்படுவதாகவும் 12,500 டாலர் இதுவரை காலமும் ஆலோசனைப் பணமாக செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விமானப் படையை நிர்வகிப்பது தொடர்பாகவும் உதிரிப் பாகங்களைப் பெற்றுக் கொள்ளவும் அமெரிக்க நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக அப் பத்திரிகை கூறுகிறது.

# வடமராட்சி கடற்பரப்பில் கடும் பீரங்கித் தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கிழக்கு கரையோரக் குடியிருப்புகள மீது சிறிலங்கா கடற்படையினர் பீரங்கித் தாக்குதலையும் கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

வெற்றிலைக்கேணியில் இருந்து காங்கேசன்துறை நோக்கி நேற்றுப் பகல் 11-15 மணியளவில் சென்றுகொண்டிருந்த கடற்படைக் கப்பல்களிலிருந்து இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன காங்கேசன்துறை நோக்கி சென்ற ஒரு பெரிய கப்பலுக்கு 'டோறா' விசைப் படகொன்று பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த போதே இத்தாக்குதல்கள் நடைபெற்றன.

வடமராட்சி கிழக்கில் செம்பியன் ற்று குடத்தனை, வடமராட்சி வடக்கில் கற்கோவளம், தொண்டமனாறு ஆகிய பகுதிகள் நோக்கி இத்தாக்குதல்கள் நடைபெற்றன எனினும் சேத விபரங்கள் அறியப்படவில்லை.

அதே சமயம் நேற்று பகல் 11-15 மணியளவில் 'அவ்ரோ'

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினை குறித்து காமினி இந்திய அதிகாரிகளுடன் பேச்சு?

## சிறிலங்கா இராணுவ அதிகாரிகளுடனும் ஆராய்வு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியாவின் பல்வேறு உயர் அதிகாரிகள் மட்டத்தில் காமினி திசநாயக்கா பேச்சுக்கள் நடத்தியதாக லங்காதீப'வில் வெளியாகிய கட்டுரையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இந்திய அரசாங்க அதிகாரிகள், புலனாய்வுத்துறை அதிகாரிகள், அரசாங்க, எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட பலருடன் காமினி திசாநாயக்கா ஆலோசனை நடத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது,

இதேசமயம் வடக்கு - கிழக்கு பாதுகாப்பு தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் முக்கிய அதிகாரிகளுடனும் காமினி திசாநாயக்கா அண்மையில் பேச்சுக்களை நடத்தியுள்ளார்

இப்பேச்சுக்களின் போது வடக்கு - கிழக்கில் எடுக்கப்படும் புதிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

அலிஸ்ரேசன் நாய் பெண் 1½ வயது. அலிஸ்ரேசன் நாய்க்குட்டிகள் (கறுப்பு) விற்பனைக்குண்டு தொடர்பு; ந, விஜயதரன் (விஜி), 125, ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (8430)

**தவறிவிட்டது**

சண்முகம் தயானந்தனுடைய அடையாள அட்டை (இல. 622221764V) பர்சுடன் 30-5-94 இல் யாழ்ப்பாணத்திற்கும் இணுவிலுக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ச. தயானந்தன், C/o, S. சிவஞானம் மூத்து கிருஷ்ணர் வீதி, சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (8491)

**தேவை**

நல்ல நிலையிலுள்ள ருத்திர வீணை ஒன்று தேவை; தொடர்பு; திருமதி ஜெகசோதி ஜோசப் 'லக்கிஸ்ரோர்' இல 46, சென் செபஸ்தியன் வீதி, பாசையூர், யாழ்ப்பாணம். (8428)

**உடன் தேவை**

நல்ல நிலையிலுள்ள 15KW மின்பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) ஒன்று உடனடியாக விலைக்குத் தேவைப்படுகிறது தொடர்பு கொள்ளவும்;- சமிதிப் பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி, தமிழீழம். (கி-9526)


# புதிய வகை ஆட்கொல்லி நோயினால் இலங்கையரும் பாதிக்கப்பட்டனரா?

## பரிசீலனை மேற்கொள்ளப் பணிப்பு

(கொழும்பு)

பிரிட்டனிலும், ஸ்கன்டிநேவியன் நாடுகளிலும், நியூசிலாந்திலும் பரவிவரும் புதிய ஆட்கொல்லி நோயினால் இலங்கையர் எவராவது பாதிக்கப்பட்டுள்ளனரா என இலங்கையிலும் பரிசீலனை மேற்கொள்ளப்பட வேண்டுமென மருத்துவ ஆய்வு நிலைய பணிப்பாளர் டாக்டர் திசா விதாரண எச்சரித்துள்ளார்.

தோலின் கீழ் அல்லது தொண்டையின் பின் புறம் தங்கிவாழும் ஸ்ரெப்டோகொக்கஸ் ஹீ மொலிடியஸ் குரூப் ஏ எனும் கிருமி நோயாளியின் சதையை அரித்து தின்று 24 மணிநேரத்தில் மரணத்தை ஏற்படுத்துகிறது-

இந்த பொதுவான கிருமி உலகெங்கும் காணப்படுகிறது தொண்டைநோயை ஏற்படுத்தும் இக்கிருமி சில வேளையில் இருதயநோய்க்கும்காரணமாக இருக்கிறது இப்போது இந்தக் கிருமி மாற்றத்திற்குள்ளாகி சதையைத் தின்னும் ஆட்கொல்லியாக மாறியுள்ளது இந்தக்கிருமி மாற்றமடையும் போது மனித உடலில் காணப்படும் நோய் எதிர்ப்புச்சக்தியினால் தாக்கப்படாமல் தன்னை பாதுகாத்துக் கொள்ளச்கூடிய போன்ற ஒரு பதார்த்தத்தை உருவாக்கிக் கொள்கிறது என ஆய்வுகள் தெரிவிப்பதாகவும் டாக்டர் விதாரண கூறியுள்ளார்-

இந்தக் கிருமி பற்றி மேலும் தகவல்களை பெறுவதற்கும் நோயின் அறிகுறிகள் பற்றி அறிந்து கொள்வதற்குமாக தான் உலக சுகாதார அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# அமைச்சரின் அசமந்தம்; சர்வதேச ஒப்பந்தம் ரத்து

(கொழும்பு)

ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழு நிதியுதவியுடன் இலங்கையில் 20 செயற்திட்டங்களை மேற்கொள்வது தொடர்பான பெல்ஜியம் நாட்டில் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் அங்கு செல்லாததினால் சிக்கலில் மாட்டியுள்ளார்.

அமைச்சரின் நடவடிக்கையால் ஏமாற்றமடைந்தஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழு இவ்வருடம் அங்கத்துவ நாடுகள் கலந்து கொள்ளும் மற்றைய மாநாடு ஒன்றை கூட்டும் வாய்ப்பு கிடையாது என இலங்கை அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறு புதுடில்லியில் உள்ள இக்குழுவின் பிரதிநிதிக்கு அறிவித்துள்ளது அத்துடன் ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழு பிரதிநிதிகள் மேற்கொள்ளவிருந்த இலங்கை விஜயத்தையும் ரத்து செய்துள்ளனர்.

ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழுவைச்சேர்ந்த 15 வெளியுறவு அமைச்சர்கள் மேற்கூறப்படும் ஒப்பந்தத்தை அங்கீகரிப்பதற்காக இலங்கை அமைச்சரின் வரவை எதிர் நோக்கி கூட்டத்தில் அரை மணி நேரம் காத்திருந்தனர். பின் கலைந்து சென்றனர்.

இந்த ஒப்பந்த அங்கீகாரத்திற்காக இலங்கை அமைச்சர் அங்கு செல்லத் தவறியதால் ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழுவின் இம்முக்கிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் சந்தர்ப்பத்தை அரசு இழந்துள்ளது பல வருடங்களுக்கு முன் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்திற்குப்பதிலாக இப்புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவிருந்தது.

இவ்விவகாரம்குறித்து ஜனாதிபதி விஜேதுங்கா கடும் நிலைப்பாடு ஒன்றை எடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தில் முன்னர் அமைச்சர் ஏ. ஆர் மன்சூரே கைச்சாத்திடுவதாக இருந்தது. ஆனால் இவ்விவகாரம் மற்றுமோர் அமைச்சருடன் கூடியளவில் சம்பந்தப்பட்டிருப்பதால் அவரே இந்த ஒப்பந்த கைச்சாத்திடல் நிகழ்வுக்கு செல்ல பணிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எம் பிள்ளைகளை கடத்தியவர் சுதந்திரமாகவே உள்ளனர்

## எம்பிலிப்பிட்டிய பெற்றோர் மகஜர்

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய பாடசாலை மாணவர்கள் 31 பேர் காணாமற் போய் நான்கு வருடங்களாகி விட்டது. இதனால் இவர்கள் கொல்லப்பட்டுவிட்டனர் என்று நம்புகின்றோம். இக்கொலைகளுக்குக் காரணமான சந்தேக நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறோம். இவ் [illegible] விற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரில் மேலும் எமது பிள்ளைகள் கடத்திச் செல்லப்பட்டு நாலரை வருடங்களாகி விட்டது எமது பிள்ளைகள் உயிருடன் உள்ளனரா, இறந்துவிட்டனரா என அரசைக் கேட்கின்றோம். எமது பிள்ளைகள் கொல்லப்பட்டு விட்டதாகவும் சூரியகந்தவில் [illegible]

எமது பிள்ளைகளைக் கடத்தியவர் யார் என்பதைத் தயவுசெய்து கண்டறியுங்கள். இவர்களைக் கைதுசெய்து நீதிமன்றில் நிறுத்துங்கள். எம் பிள்ளைகள் கடத்திச் செல்லப்பட்டதற்குத் தகுந்த சாட்சி எம்மிடம் உண்டு. இக்கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் இன்றும் சுதந்திரமாக நடமாடி வருகின்றனர். அவர்களைக் கைது செய்து நீதியை [illegible]

## மாணவர் எழுச்சி விழா

சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் மாணவர் எழுச்சி நாள் விழாவும் தமிழ்மொழி கலைத்திறன் போட்டிப் பரிசளிப்பு வைபவமும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன் தலைமையில் நடைபெறும்'

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் அருட்திரு. பிரான்சிஸ்யோசவ் அடிகளார் இவ்விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுவார்.

## மெய்வல்லுநர் போட்டி

தெல்லிப்பழை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை பி ப. 1 30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு, த துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்

யாழ்ப்பாணம் வலயம் இரண்டைச்சேர்ந்த பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு, சி, வேலாயுதம் இப்போட்டியின் போது முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## மாணவர் எழுச்சி நாள் விழா

தெல்லிப்பழைக்கல்விக் கோட்டப்பாடசாலைகளின் மாணவர் எழுச்சி நாள் விழாவும் தமிழ்மொழி—கலைத்திறன் போட்டிப் பரிசளிப்புவைபவமும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு மருதனார்மடத்திலுள்ள மகாஜனாக் கல்லூரியில் கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்

இவ்விழாவில் யாழ்பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் அ சண்முகதாஸ் முதன்மை விருந்தினராகவும், தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் திரு வே. இளங்குமரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்

## இல்லப் போட்டி

கொண்டாவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று புதன் பிற்பகல் 2மணிக்கு பாடசாலை விளையாட்டரங்கில் நடைபெறும்.

# நினைவு கூருகின்றோம்... 01.06.1994

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய-

**சிவரத்தினம் சச்சிதானந்தன்** (3 ம் ஏக்கர் திருமலை)

மட்டு - களுவாஞ்சிக்குடி சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு காணாமற் போன தமிழ்ப் பொதுமக்கள்

1986ஆம் ஆண்டுயாழ்-கோட்டை முகாம்சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 02 சிறுவர்கள் 02 பெண்கள்,

1987ஆம் ஆண்டு கோப்பாய் பாலத்தடியில் பாரவண்டியொன்றின் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு மட்டு- மயிலம்பாவெளிப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதுசயனைட்உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப். [illegible]** (காத்தமுத்து சின்னராசா-ஆரையம்பதி - மட்டு)

அம்பாறை - தம்பலவத்தைப் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த-

**தீபன்** (சி குகநாதன் - சின்னவத்தை - அம்பாறை)

யாழ் - உரும்பராயில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**பாக்கியம் அக்கா** (பாக்கியம் கந்தையா - சிவன் வீதி, உரும்பராய்)

யாழ் - நல்லூரில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**கதிரப்பிள்ளை நடராசா** (மூத்தவிநாயகர்கோயில் வீதி, நல்லூர் - யாழ்)

1989ஆம் ஆண்டு தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டு பற்றாளரான

பிரஜைகள்குழு பிரமுகர்

**விஜயநாயகம் விஜயநாதர்** (தொண்டமானாறு)

யாழ்-ஏழாலைவடக்கில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**திருமதி சிவஞானமதி சிவசுப்பிரமணியம்** (ஏழாலை வடக்கு - யாழ்)

**திருமதி செல்வராணி உருத்திரசிங்கம்**

யாழ் - திருநெல்வேலி கலாசாலைச் சந்தியில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவன் நாட்டுப்பற்றாளரான-

**சிகரட்ணம் ஆனந்தராசா** (ஆனந்) பாற்பண்ணை வீதி, நல்லூர் - யாழ்)

பருத்தித்துறையில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்

1991ஆம் ஆண்டு மட்டு - கிரான்குளப் பகுதியில் தமது வீட்டில் குளித்துக் கொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட தந்தை மகன்

1992ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - செங்கலடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவ அதிகாரியின் ஜீப் வண்டி மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**கப்டன் மனோகரன்-[illegible]** (இன்னாசி துரைராசா - கரடியனாறு - மட்டு)

மணலாறு - அலம்பில் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறோம். இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை இம்மாணவர்களின் பெற்றோர் ஐ. தே. க. பொதுச் செயலர் காமினி விஜேசேகர

பிள்ளைகள் கொல்லப்பட்டு விட்டதாகவும் சூரியகந்தவில் சில சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் சட்டமா அதிபர் எமக்குக் கூறியிருக்கின்றார்,

மாடி வருகின்றனர். அவர்களைக் கைது செய்து நீதியை நிலைநாட்டுவீர்கள் என எதிர்பார்க்கின்றோம். எமது இந்த மகஜர் 592 ஆவது ஆகும்.

ழுவுக்கு ... பணிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது!

இன்று புதன் பிற்பகல் 2மணிக்கு பாடசாலை விளையாட்டரங்கில் நடைபெறும்.

## இரட்டைச் சூட்டடுப்பு உற்பத்தி நிலையத்தில் (குளப்பிட்டி)

## வேலை வாய்ப்புகள்

- மட்கல உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோரும், ஆர்வமுள்ளோரும் விண்ணப்பிக்கலாம்.
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- வயதெல்லை கிடையாது.
- உற்பத்திக்கான பயிற்சி இந்நிலையத்தில் வழங்கப்படும்.
- பயிற்சியின் போது ஊக்குவிப்பாக உதவுதொகை வழங்கப்படும்.
- பயிற்சியின் பின் நிலையத்திலேயே ஒப்பந்த அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படும்.
- பயிற்சியின் பின் சுயமாக தொழில் செய்ய விரும்பின் அதற்கான முதலீட்டு உதவிகள் வழங்கப்படும்.

நேரில் தொடர்பு கொள்ளுங்கள்

### "சக்திப்பகுதி"

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
அரசியல்துறை - தமிழீழ விடுதலைப்புலிகள்,
காங்கேசன்துறை வீதி,
தாவடிச்சந்தி,
தாவடி.
தமிழீழம்,

(சி-9566)

## மாவட்டங்கள் தோறும் ஜனாதிபதி சுற்றுப்பயணம்

(கொழும்பு)

மாவட்ட மட்டங்களுக்கு சென்று ஐ.தே.க அமைப்பாளர்களைச் சந்தித்து மாவட்ட மாநாடுகளில் பேசுவதற்காக ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா சுற்றுப்பயணம் ஒன்றை ஆரம்பித்துள்ளார். ஜூலை மாத நடுப்பகுதி வரை ஜனாதிபதி இவ்வாறு பயணம் செய்வார்.

கடந்த சனியன்று கண்டி மாவட்ட அமைப்பாளர்களை ஜனாதிபதி சந்தித்து அடுத்து வரும் தேர்தல்களில் அவர்கள் எத்தகைய பங்களிப்பை செய்ய வேண்டும் என்பதை விளக்கினார். ஐ. தே. க. எம்பிகளுக்கும் அமைப்பாளர்களுக்கும் ஐ.தே.கவின் கொள்கைகளை எடுத்து விளக்கவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில் தேர்தலை முன்னிட்டு கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு அரசின் அபிவிருத்தி திட்ட வேலைகளை துரிதப்படுத்த பாரிய ஏற்பாடுகளை செய்கின்றது.

## பொருத்தமான தொழில் வழங்க அமைச்சு ஏற்பாடு

(கொழும்பு)

பதவி நிலை உத்தியோகத்தர் பதவிகளை வகிக்காத குறைந்த சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கு அவர்களின் தகுதிக்கமைய வேலைவாய்ப்பு வசதியினை வழங்க அரசு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இதனை கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு நடைமுறைப்படுத்தும்.

அரச சேவை எழுதுநர் மற்றும் குறைந்த சேவைகளில் ஈடுபடுத்தப்பட்ட பட்டதாரிகள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவர். 1970 ஜனவரி முதல் 1980 டிசம்பர் வரை இக்குறைந்த சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டோர் நன்மையடைவர்.

### தேவை

கோண்டாவில் நூல் நிலையம் ஒன்றிற்கு அனுபவம் மிக்க தமிழ், ஆங்கில தட்டெழுத்தாளர் & சுருக்கெழுத்தாளர் தேவை.

தொடர்பு:-
விள. இல: 335,
மே/பா. ஈழநாதம்,
மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

(8424)

... - கரடியனாறு - மட்டு)

மணலாறு - அலம்பில் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய.

லெப். அருண்-ஜோனாட் (அழகையா தங்கராசா கோட்டைக்கல்லாறு - மட்டு)

2-ம் லெப். கோமளன் (சபாரட்ணம் சுரேஸ்குமார் பன்குளம் திருமலை)

கிருஷ்ணமூர்த்தி (சிவராசா பரமநாதன் பெரிய குளம் வீதி, நெடுங்கேணி மணலாறு)

2-ம் லெப். மயூரன்-இடியாம்பி [இராசலிங்கம் ஆனந்தராசா புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு]

2-ம் லெப். தியாகு [இராசையா சிவகுமார் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு]

அமுதன் [சிவபாதம் அமுதன் கணுக்கேணி, முள்ளியவளை முல்லைத்தீவு]

2-ம் லெப். அமிர்தலிங்கம் - சிவலிங்கன் [ஆனந்தராசா சிவபாலன் முழங்காவில் மன்னார்]

ஜெகநேசன் (பொன்னம்பலம் செந்தமிழ்ச்செல்வன் மாந்தை மன்னார்]

2-ம் லெப். கதிரவேல் -கோபு [ஈஸ்வரன் இராசன் இராமனூர் புளியங்குளம் வவுனியா]

2-ம் லெப். அறிவொளி சுஜன் [கதிரவேலு விக்கினேஸ்வரன் கோயில்குளம் வவுனியா]

2-ம் லெப். விசுவாசம் (ஐயம்பிள்ளை ஜெயக்குமார் காந்திக்கிராமம் கிளிநொச்சி]

2-ம் லெப். கணேசன்-நிக்கலஸ் [பாலச்சந்திரன் ரகுதாஸ் அம்பாள்குளம் கிளிநொச்சி]

2-ம் லெப். யோகமூர்த்தி -வாணன் (வெள்ளைக்கண்டு விஜயகுமார் 7 ம்வாய்க்கால் கிளிநொச்சி)

2-ம் லெப். விஜிதரன் -விஜித் (மகேந்திரன் கருணகுமார் 5ம் பண்ணை, கனகபுரம் கிளிநொச்சி

லெப். மதுமன்- வியாஸ் (வேலுப்பிள்ளை இராஜேந்திரன் மாத்தளை மலையகம்)

இளங்குமணன்-தயாளன் (இரவீந்திரநாதன் வேந்தன் மயிலியதனை தொண்டமனாறு)

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-9562)

Nallur Branch Library

# கொழும்பு பங்குச்சந்தை தளம்பல் நிலையில்

(கொழும்பு)

கொழும்பு பங்குச் சந்தையின் உறுதித்தன்மை தொடர்ந்தும் தளம்பல் நிலையிலேயே காணப்படுகிறது எனவும் மொத்த விற்பனையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்கு குறைவடைந்துள்ளது எனவும் கூறப்படுகிறது.

கடந்த வாரம் வெள்ளியன்று பங்குச் சந்தையின் விலைக் குறிகாட்டி, 1122 1 லிருந்து 1015.13 ஆக வீழ்ச்சி கண்டுள்ளது. மாறும் விலைக் குறிகாட்டி 1493 லிருந்து 1483.76 ஆக வீழ்ச்சி கண்டுள்ளது. வாராந்த மொத்த சராசரி விற்பனை 73 3 மில்லியன் ரூபாவினால் குறைவடைந்துள்ளது. இது 21.7 சதவீதவீழ்ச்சி எனப்படுகிறது. மொத்த விற்பனையில் 37சதவீதமான வெளிநாட்டு முதலீடு மட்டுமே காணப்பட்டதாகவும் பங்குச்சந்தை வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

# ஐ.ஐ.தே.முவை கலைக்கும் நோக்கம் எமக்கு இல்லை

## முன்னணியின் தலைவர் பிரேமச்சந்திரா

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைக் கலைக்கும் நோக்கம் எமக்கில்லை ஐ தே கவுடன் கூட்டுச் சேர்வதாயின் அது நிபந்தனைக்குட்பட்டதாகவே இருக்கும் என இம் முன்னணியின் தற்போதைய தலைவரும் வடமேல் மாகாண முதலமைச்சருமான ஜி. எம். பிரேமச்சந்திரா கூறினார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாம் சுதந்திரமாக இயங்குவோம். முன்னணியை பலமடையச் செய்ய வேண்டிய அனைத்துப் பணிகளும் முன்னெடுக்கப்படும் என கட்சியின் தேசிய நிறைவேற்றுகுழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். 420 பேர் அங்கத்தவராகக் கொண்ட இத் தேசிய சபையில் 392 பேர் இந்த மாநாட்டிற்கு சமுகமளித்திருந்ததாகவும் அவர் கூறினார்.

முன்னணியிலிருந்து பிரிந்து சென்ற திருமதி சிறிமனி அத்துலத் முதலி தலைமையில் இயங்கும் லலித் முன்னணிக்கும் தமது முன்னணிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது எனவும் அவர் கூறினார். சிறிமனியின் பிரிவு எதிரணியான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு அளிக்கின்றது எனவும் அவர் குற்றஞ்சாட்டினார். தமது முன்னணியைச் சேர்ந்த சிலர் எதிரணிக்கு ஆதரவளித்ததனால் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

# முஸ்லிம் காங். போட்டியிட வற்புறுத்தி தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட வேண்டும் என தலைமைப் பீடத்தை கோரும் தீர்மானத்தை இக் கட்சியின் புத்தளம் மாவட்டகிளை நிறைவேற்றியுள்ளது.

வேட்பாளராக கட்சித் தலைவர் அஷ்ரப் நிறுத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானம் கூறுகிறது.

# கச்சேரி தீயிடப்பட்டதற்கு நான் காரணமல்ல


## நுவரெலியா மேயர் தெரிவிப்பு

(கொழும்பு)

நுவரெலியா கச்சேரி தீயினால் நாசமாக்கப்பட்டதற்கு தாமே பின்னணியில் இருந்ததாக வெளியான செய்திகளுக்கு அந்நகரமேயர் திருமதி நளின் திலகா ஹேரத் மறுப்பு தெரிவித்துள்ளார். இத் தீக்கு காரணம் எதிர்த் தரப்பான ஐ.தே.க குண்டர்களும் காடையர்களுமே காரணம் என அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

காமினி திசாநாயக்கா நுவரெலியா வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே மேயரினால் கச்சேரி தீயிடப்பட்டதாக வெளியான செய்தியை மறுக்க திருமதி ஹேரத் இது ஒன்றும் எனது தனிப்பட்ட சொத்தல்ல ஒருவரின் வருகையை தடுப்பதற்காக தீவைத்துக் கொளுத்த என குறிப்பிட்டார்.

# பிறந்த நாள் நினைவலைகள்



## லெப்டினனட் சாம்பவி

சுதா - தியாகலிங்கம்

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவி)

தாயின் மடியில் அரும்பாய் - பூநகரி மண்ணில் வித்தாய்
1 - 6 - 1973 11 - 11 - 1993

ஆவியைப் பணயம் வைத்தே
அருந்தமிழீழம் மீட்க
பூமியும் நடுங்கி ஏங்க
புரிந்த நற்போரால் நல்ல
காவியம் படைத்த வேங்கை
களங்கமில் சாம்பவி நீ
மேவிடும் உன்தன் நாமம்
மேதினில் நிலைக்கு மட்டும்.

நீ பிறந்த போதோ பெரிதுவந்தோம்
உனை இழந்த போதோ உன்வீரம் கண்டோம்
நீ பிறந்த இந்நாளில் எம்மிடையே நீயில்லை
உனை நாங்கள் நினைக்கின்றோம் கண்ணீரில்
கலக்கின்றோம்.

இவரது பிறந்த நாளில் இவர்
பிரிவால் கண்ணீர் மல்கும்.

"தெய்வவாசா"
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

பப்பா, அம்மா, தம்பி,
தங்கை, அம்மம்மா.

(8309)

# கடற்றொழிலாளர் கல்வி உயர்த்தப்படல் வேண்டும்

## புவியியல்துறை விரிவுரையாளர் சூசை

கடற்றொழிலாளரின் கல்வி தொடர்பான ஒரு கலந்துரையாடலில் பங்குபற்றுவதில் மகிழ்ச்சியடைவதாகவும் கடற்றொழிலாளர் முன்னேற வேண்டுமானால் கல்வித்தரம் உயர வேண்டும் எனவும், இதற்கு உங்களைப் போன்றவர்கள் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும் என அண்மையில் இன்பருட்டி மீனவர் சங்கம், சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சபை ஆகியவற்றுடன் இணைந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கடற்றொழிலாளரின் கல்வி மேம்பாட்டுக்கான கருத்தரங்கில் பேசிய யாழ் பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளர் திரு சூசை குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கடல்வள அபிவிருத்திப் பகுதியினரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கடற்புலிகள் மாவட்ட இணைப்பாளரும், அப்பகுதியில் உள்ள ஏழு கிராமங்களைச் சேர்ந்த க. பொ. த. சாதாரண தர, உயர் தர மாணவர்களும், சங்கப் பிரதிநிதிகளும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து பேசிய திரு. சூசை அவர்கள், பாடசாலைகளில் கடல்வள அபிவிருத்தி பாடத்திட்டத்தை சேர்ப்பதற்கும், இப்பாடத் திட்டத்தை மாணவர்கள் ஆர்வத்துடன் கற்க தூண்டுவதற்கும் புறநிலைப் படிப்புகள் அலகின் மீன்பிடியியல் ட்றைகை நெறியில் இணைந்து கொள்வதற்கான ஆர்வத்தை உருவாக்கவும், சமூகத்தில் பெண்களின் செயல்பாட்டை அதிகரிக்கச் செய்வதற்குமே இக்கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

# வர்த்தகக் கருத்தரங்கு

யாழ் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ மாணவர் மன்றம் உயர்தர மாணவர்களுக்கு நடாத்தும் கருத்தரங்கு தொடரில் இரண்டாவது கருத்தரங்கு தொடர் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும் கணக்கியல், பொருளியல், வர்த்தக பாடங்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் நிகழ்த்தப்படும்.

# பருத்தித்துறைக்கு 'றுகுணு'

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு 'றுகுணு' கப்பல் வியாழக்கிழமை காலைவந்துசேரும் அதனையடுத்து 'மாகோ' கப்பலில் மண்ணெண்ணெய் வரவுள்ளது (யோ)

# ஐ. தே. கவின் செயற்குழுவில் சஜித் பிரேமதாசாவிற்கு இடம்?

(கொழும்பு)

ஐ தே. க. செயற்குழுவில் பிரேமதாசாவின் புதல்வர் சஜித் பிரேமதாசாவிற்கும் இடமளிக்கப்படவுள்ளது. இதற்காக அவரின் விருப்பத்தை கட்சியின் உயர்பீடம் கோரியுள்ளது. ஐ தே க செயற்குழு இப்போது புனரமைக்கப்பட்டு வருகிறது இதற்காக நான்கு ஐந்து உறுப்பி மாகாண கட்சி உறுப்பினர்களை சந்திப்பதற்காக ஐ.தே. க. பொதுச்செயலர் கடந்த திங்கள் அனுராதபுரம் சென்றார் அனுராதபுரம், பொலநறுவை பகுதி ஐ தே க அமைப்புகளை அவர் சந்தித்து பேசவுள்ளார்.

# கிராமங்கள் தோறும் சீதன தடைகருத்தரங்குகள்

(தொல்புரம்)

கடந்தகிழமை கைதடி, சாவ

# பொதுசன உதவிப்பணம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி தபாலகத்திலும் அதற்கு உட்பட்ட சகல தபாலகங்களிலும் ஆனி மாதத்திற்குரிய மாதாந்த பொதுசன உதவிப்பணம் இன்று முதலாம் திகதி முதல் வழங்கப்படவுள்ளது. (86)

மலிவு விலையில் சகல பொருட்களும்
பெற்றுக் கொள்ளவும்
ஆண், பெண் தையல் வேலைகளிற்கும்
அன்பளிப்பு பொருட்களிற்கும்
அன்பளிப்பு மடல்களிற்கும்
நகரில் முன்னோடி நிலையம்

★ எழிலகம் ★

லெப். இளங்கோ தெரு
(மணிக்கூட்டு வீதி)
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- மே மாதத்திற்கான அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு 3 - 6 - 94 மு.ப. 11.00 மணியளவில் இடம் பெறும்.

(சி-9564)

கொழும்பு ஸ்ரூடியோ
தொழில் நுட்பத்தில் 35 வருட அனுபவம் வாய்ந்தவர்கள்
தரமான
Line, Half tone and Colour Bloeks

# உனது பிறந்தநாளில்

உனது பிறந்தநாளில்

நினைவு கூருகின்றோம்





**கந்தசாமி விஜயக்குமார் (விஜயன்)**

(சாவகச்சேரி யா| டிறிபேக்கல்லூரி O|L மாணவன்)

ஆண்டவன் படைப்பு 01. 06. 1973

அநியாய அழிப்பு 01. 05. 1990

ஆண்டு நான்கு போனாலும் பாசமது போகுமோ?
முத்தான புன்சிரிப்பு முகம் மனம் விட்டு மாறுமோ?
பார்ப்பதற்கு பலதிருக்க பாதியிலே விட்டுச்
சென்றனையோ?
நாம் நினையாத நாளிலே எம்மை விட்டு
மறந்தாயே - விஜயா...

பெற்றோர், உடன்பிறப்புக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

திருமுருகன் லொறி உரிமையாளர்
டச்சு வீதி,
சாவகச்சேரி;

(8372)


...மைகளப்பட்டு வருகிறது இதற்காக நான்கு ஐந்து உறுப்பினர்கள் பதவி விலக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது இடத்திற்கு காமினி திசாநாயக்கா, ஜி. பண்டிதரட்ண, சஜித் பிரேமதாசா ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர். எனினும் இன்னும் கட்சியின் செயற்குழு உறுப்பினர் பட்டியல் பூர்த்தியாகவில்லை எனவும் பூர்த்தியாக்கப்பட்டதும் ஜனாதிபதி அங்கீகாரம் பெறப்பட்டு அறிவிக்கப்படும் எனவும் கட்சி பொதுச்செயலர் தெரிவித்தார் இதே சமயம் வடமத்திய

## போட்டிகள்

(வடமராட்சி)

மருதங்கேணி கல்விக்கோட்ட மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 8ஆம் 9ஆம் திகதிகளில் செம்பியன்பற்று அ.த.க பாடசாலையில்பிற்பகல் 2மணிக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு ந இராசலிங்கம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலாளர்திருககனகரட்ணம் கலந்து கொள்வார் (யோ)

## பின்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை - வேலணை பிரதேச செயலர் விளையாட்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இவ் விளையாட்டு விழா எதிர்வரும் 4-ம் 5-ம் திகதிகளில் நடைபெறஇருந்தது மேற்படி விழாவை பின்னர் நடாத்துவது தொடர்பான கலந்துரையாடல் சுபாஸ்ஹொட்டேலில் அமைந்துள்ள பிரதேச செயலக காரியாலயத்தில் வரும் 3-ம் திகதி 10மணிக்கு நடைபெறவுள்ளது சகல கழக உறுப்பினர்களையும் தவறாது சமுகம் தருமாறு பிரதேச செயலர் திருமதி ப; திலகநாயகம் கேட்டுள்ளார்!

(சி, தி)

(தொல்புரம்)

தேசிய விடுதலையோடு, சமூக விடுதலையையும் வென்றெடுக்கும் நோக்கோடு தமிழீழ விடுதலைப் புலிகளினால நடாத்தப்படும் சீதன தடைச் சட்ட பிரசார கருத்தரங்குகள் வலி மேற்கின் சகல பகுதிகளிலும் கட்டம் கட்டமாக நடைபெற்று வருகின்றன.

சங்கானை வட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி லோகா தலைமையில் நடைபெற்று வரும் மேற்படி கருத்தரங்குகள் பொதுப்பணி மன்றங்கள், சனசமூக நிலையங்கள், இடம்பெயர்ந்தோர் முகாம்கள் போன்றவற்றில் நடைபெற்று வருகின்றன.

யாழ். மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு எழிலன், மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி பொன்னிலா உட்பட மற்றும் பலர் மேற்படி நிகழ்வில் சிறப்புரையாற்றி வருகின்றனர். சங்கானை, வட்டுக்கோட்டை. மூளாய், தொல்புரம், சுழிபுரம் ஆகிய பகுதிகளின் பல பொது இடங்களில் சிறப்பாக நடைபெற்று வரும் இக்கருத்தரங்குகளில் அநேக மக்கள் கலந்து கொள்வதை காணக் கூடியதாகவுள்ளது, மேலும் பல இடங்களில் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன், ''சீதனப் பிரச்சினையை ஒழிப்பதில் ஒத்துழைப்போம்'' எனும் வீதி நாடகமும் வலிகாமம் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் காண்பிக்கப்படுகிறது.

ஃ ஃ

சீதன ஒழிப்புக் கருத்தரங்கு தென்மராட்சிக் கோட்டத்தில் வட்டவை ரீதியாக கிராமம் தோறும் இடம்பெற்று வருகின்றது.

தென்மராட்சிக் கோட்ட விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினால் நடாத்தப் பட்டுவரும் கருத்தரங்குகள் கடந்தகிழமை கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், பளை வட்டங்களில் இடம்பெற்று வருகின்றது. இதில் 'சீதன ஒழிப்புத் தெருக்கூத்தும். சீதன அம்புகள் நாட்டிய நாடக ஒளிப்பதிவு நாடாவும் காண்பிக்கப்பட்டு வருகின்றது இதே வேளை முக்கிய சந்திகள் தோறும் உணர்வு ஊட்டக் கூடிய கருத்துக்கள் அடங்கிய பதாகைகளும் கட்டப்பட்டுள்ளன. சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்குகளில் விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்களும் கலந்துகொண்டு சீதன ஒழிப்பின் தேவையினை மக்களுக்கு விளக்கி வருகின்றனர்! இக்கருத்கரங்குகளில் ஒவ்வொரு பகுதியிலும் பெருந் திரளான மக்கள் கலந்து கொண்டு வருகின்றனர்.

(41, 86)

## வீதி புனரமைப்பு

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட 93ஆம் ஆண்டிற்கான தொடர் வேலைகள் ஒதுக்கீட்டு நிதியில் வலிமேற்கு பிரதேச சபையின் பிரதேச எல்லைக்குட்பட்ட பல வீதிகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

சுழிபுரம் கம்பனை அம்மன் வீதி, பாரைவெட்டிஒழுங்கை, வட்டுக்கோட்டை மூளாய் வீதி 4ஆம் ஒழுங்கை, வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை வீதி ஆகியன அழகாக செப்பனிடப்பட்டு திருத்தியமைக்கப்பட்டுள்ளன. மேலும் சில வீதிகள் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் மேற்படி பிரதேசசபை வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

(41)

### பரிசளிப்பு விழா

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் நடாத்திய பொது அறிவுப் போட்டியின் பரிசளிப்பு விழா நாவலர் கலாசார மண்டபத்தில் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும்,


Line, Half tone and Colour Bloeks
றபர் சீல் Rubber Stamps
சில்க் ஸ்கிறின் Silk Screen
Re copy பழைய படங்களில் இருந்து புகைப் படங்களைப் பெரிதாக்க

எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்
குறைந்த செலவில் குறுகிய காலத்தில்
தரமாகப் பெற்றுக்கொள்க;

**கொழும்பு ஸ்ருடியோ**

55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-9563)

G. A. Q. (95)

1st. in Com

**யாழ் பல்கலைக் கழகம்**

(வெளிவாரி)

மேற்கூறப்பட்ட பாடநெறிக்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.
இதற்கான விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன;

விபரங்களுக்கு

**S. அருள்நங்கை**
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம்சந்தி, யாழ்.

(சி-9565)

**விற்பனைக்கு**

கொழும்பு சீமெந்து, கற்பூரம்,
வாள்பிளேட், மோட்டார் சயிக்கிள் உதிரிப்பாகம்

யாவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்.

C. M. சுகந்தினி
309, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(8384)

# வாகரைக்கு பாவனைப் பொருள்; இராணுவத்தால் தடை விதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பகுதியில் பொது மக்கள் அன்றாட பாவனைப் பொருட்களை எடுத்துச் செல்லும் நடைமுறையைப் படையினர் நிறுத்தியுள்ளனர் வாகரைப் பிரதேசத்தில் இராணுவத்தின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டதையடுத்து இப் பிரதேசத்திலுள்ள வியாபாரிகளுக்கும், பொது மக்களுக்கும் அத்தியாவசிய பொருட்களை குறிப்பிட்டளவுக்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கி வந்தனர் இவ் அனுமதி வழங்கும் நடைமுறை உண்மையில் நிறுத்தப் பட்டிருப்பதைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் பலத்த சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னர் இருந்த படையினர் மீளப் பெறப்பட்டு புதிய படையினர் அமர்த்தப்பட்டதையடுத்து இந்த அனுமதி வழங்கும் நடைமுறை நிறுத்தப் பட்டிருக்கிறது இதன்படி மிகக் குறைந்த அளவான பாவனைப் பொருட்களையே மக்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப் படுகின்றனர்- சுமார் இருபது மைல் தூரத்தைக் கடந்து வருகின்ற போதும் போதியளவு பாவனைப் பொருட்களை எடுத்துச்செல்ல முடியாமையால்மக்கள் பெரும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

## சுதந்திர சதுக்கத்தை பயன்படுத்த தடை

### மேல்மாகாண முதலமைச்சருக்கு விதிப்பு

(கொழும்பு)

மேல்மாகாணசபை முதலமைச்சர் பதவியேற்று ஒருவருடம் பூர்த்தியானதை முன்னிட்டு சமயச் சடங்குகளை நடாத்த சுதந்திர சதுக்கத்தினை ஒதுக்கித் தருமாறு மேல் மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க விடுத்த கோரிக்கை மறுக்கப்பட்டுள்ளது.

இச்சமயச் சடங்கு எதிர் வரும் 4ஆம் திகதி நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன; தேசிய ரீதியான வைபவங்களை நடாத்துவதற்கு மாத்திரம் சுதந்திர சதுக்கத்தினை பயன்படுத்தும்படியும் சமயச் சடங்குகளுக்கு பயன்படுத்த அதனை அனுமதிக்க முடியாதிருக்கின்றது என்றும் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் காரணம் தெரிவித்துள்ளனர்,

## சிங்களவரை குடியேறுமாறு அரசாங்கம் வற்புறுத்து

(கொழும்பு)

வவுனியா தெற்கு சிங்கள கிராமங்களைவிட்டு வெளியேறிய சகல சிங்கள கிராமவாசிகளும் அடுத்த மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் மீண்டும் அப்பகுதியில் குடியேற வேண்டும் என அரசாங்கம் அறிவுறுத்தி இருப்பதாக தெரியவருகின்றது.

இப்பகுதியைச் சேர்ந்த சிங்கள மக்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் எனவே இப்பகுதியில் மீண்டும் இவர்களை குடியேறுமாறு வற்புறுத்தப்பட்டுள்ளதாக மேலும் தெரிய வருகின்றது.

இப்பகுதிக்கு மிக விரைவில் ஜனாதிபதி விஜயம் செய்ய இருப்பதால் இவர்களை குடியேறுமாறு வற்புறுத்துவதாக தெரிய வருகின்றது.

## எம்.பிகள்மீது தொடர்ந்து கட்சி நிர்ப்பந்தம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியபட்டியல் உறுப்பினர் அலெக்ஸ் றோபசன், ஆர் ஏ டி. சிறிசேன, காலிங்க ஒபேவன்ச, ரூப்பா சிரியாணி டேனியல், ரெஜினோல்பெரேரா, ஆகியோரைதொடர்ந்து அப்பதவியில் இருந்து விலகுமாறு வற்புறுத்தப்பட்டுவருவதாகவும் தாம் தொடர்ந்து தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை காப்பாற்ற தீவிர முயற்சி செய்யவேண்டி இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## கலாநிதி பட்டப்படிப்புக்கு 3 வருட லீவு கிடைக்கும்

(கொழும்பு)

அரசாங்க உத்தியோகத்தர்கள் முதுமாணிப் பட்டம் அல்லது அதையொத்த ஒரு பட்டப் படிப்பு நெறியை பயின்று பின்னர் கலாநிதி பட்டம் ஒன்றுக்குக் கற்பதற்காக மூன்று ஆண்டுகால லீவு பெறமுடியும்

இது தொடர்பான பணிப்புரை சுற்றறிக்கை மூலம் சகல அமைச்சுகளினது செயலாளர்களுக்கும் திணைக்கள தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

## ஆலடிக்குளத்தில் நந்நீர் ஊற்று

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையினர் குளங்களைத் தோண்டி ஆழமாக்கும் பணியில் யாழ் ஆலடிச் சந்திக் கருகாமையில் உள்ள வயல் குளம் ஒன்றைத் தோண்டியபோது அதனுள் இருந்த பெரிய கல்லொன்றை அகற்றியவேளை அகற்றடியில் இருந்து நந்நீர் ஊற்றுபெருக்கெடுத்து குளம் நிரம்பியது

மேற்படி குளம்கோம்பையன் மணல் மயானத்திற்கு முன்பாக உள்ள வயலில் அமைந்துள்ளது இக்குளத்தை ஒரு அடி ஆழமாக்கிய போது அங்கு தென்பட்ட பெரிய கற்களில் ஒன்றை கட்டி டிராக்டர் மூலம் இழுத்து எடுத்த போதே இவ்வூற்று சிறிப்பாய்ந்தது மேற்படி ஊற்று வாயில் வந்த நீரை பருகிப் பார்த்த ஊழியர்கள் அந்நீர் மிகவும் நன்றாக இருந்ததை அவதானித்தனர் ஒரு அடி ஆழத்தில் அதுவும் நந்நீர் ஊற்று வெளிப்பட்டது ஒரு அதிசயமாகவே கருதப்படுகின்றது

(சி), (தி)

## நெருக்கடியைக் குறைக்க அதிக வாக்களிப்பு இடங்கள்

(கொழும்பு)

வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் வாக்களிப்பு நிலையங்களில் நெருக்கடியைக் குறைக்க முடியும் என்றும், ஆளும் மற்றும் எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் ஆலோசனை கூறியுள்ளனர்

ஜனாதிபதித் தேர்தலின் பின்பு பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால் அது வேட்பாளர்களின் தெரிவில் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும், ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளர் வென்றாலோ, தோற்றாலோ அது வேட்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட இருப்பவர்களின் நிலையில் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும்,

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர் கட்சியின் விதிமுறைகளுக்குப் புறம்பாகத் தமது எதேச்சையான முடிவின்கீழ் பாராளுமன்றத்திற்கான வேட்பாளர்களாக்க முடியும் எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

ஒரே நேரத்தில் இரு தேர்தல்களும் நடத்தப்பட்டால் இப்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் பலரும் மீண்டும் நியமனம் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படலாம் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது,

### எழுதுநர் சேவை அ பிரிவு உத்தியோகத்தர்

## வினைதிறமைகாண்பரீட்சை விண்ணப்பிக்கலாம்

அரசாங்க, மாகாண அரச சேவையில் பொது எழுதுநர் சேவையின் IIஆம் வகுப்பின் 'அ' பிரிவில் உள்ள உத்தியோகத்தர்க்கான வினைதிறமைகாண் தடைப் பரீட்சை எதிர்வரும் செப்டம்பரில் நடைபெறும். இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான பரீட்சை யாழ்ப்பாணத்திலும் [illegible] யம் நீக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அலுவலக முறையும் நடைமுறையும் அரச அலுவலகங்களில் நடைமுறையில் இருக்கும் கணக்கு முறை ஆகியவற்றைக்கொண்டதாக பரீட்சை பாடத்திட்டம் அமையும். இது தொடர்பான விண்ணப்ப முடிவுத் திகதி ஜூலை 30ஆம் திகதியாகும். வர்த்தமானி அறிவித்தலை ஈழநாதம் அலுவலக [illegible]

## ஆங்கில ஆசிரிய நியமனம்

ஆங்கில ஆசிரிய நியமனத்துக்கான சேவை முன்பயிற்சியை யாழ் இந்துக் கல்லூரியில் பெற்றுக் கொண்ட 26 ஆசிரியர்கட்குமான நேர்முகத் தேர்வு ஒன்று இம் மாதம் 8ஆந் திகதி புதன்கிழமை பத்தரமுல்லவிலுள்ள கல்வி அமைச்சின் கல்விச் சேவைச் சபையில் இடம்பெறும்.

மகரகம தேசியக் கல்வி நிறுவனத்தில் தமது சேவைமுன் பயிற்சியைச் [illegible]





தயாரிப்பு: யாழ்ப்பாணம் பனை தென்னை வள - அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி [வது]

குறிப்பு: (1) 30 மி. லீ. வெற்றுப்பெட்டி

(2) 300 மி. லீ. வெற்றுப் போத்தல் (பென்ரா, கொக்கோ கோலா)

(3) ஜாம் போத்தல்

(4) 625 மி. லீ. நெல்லிக்கிறஸ் போத்தல்

மேற்படி பொருட்களை விற்க விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். (விலை நேரில் பேசித் தீர்க்கப்படும்)

பொதுமுகாமையாளர்,

யாழ்ப்பாணம் பனை தென்னை வள

அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

7/1, பலாலி வீதி, கந்தர்மடம்,

யாழ்ப்பாணம்.

(இ-9559)

வனத்தில் தமது சேவைமுன் பயிற்சிச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து உரிய உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொண்டு வேண்டிய ஏனைய ஆதார ஆவணங்களுடன் நேர்முகத் தேர்விற்குச் சமுகமளிக்குமாறு தொடர்புடைய அனைத்து ஆசிரியர்களையும் யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்தின் செய்திக் குறிப்பொன்று கேட்டுள்ளது. மேலதிக தகவல்பெறவிரும்புவோர் இன்று 11 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் தெற்குக் கல்வி வலயத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தல் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடைபெறும் எனவும் போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து பரீட்சை நிலை

திகதி ஜூலை 30ஆம் திகதியாகும். வர்த்தமானி அறிவித்தலை ஈழநாதம் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும்.

## கிழக்கில் புலிகளுடன் தொடர்புடைய அமைப்பு

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய அமைப்பு ஒன்று கிழக்கு மாகாணத்தில் இயங்குவதாகவும் இவ் அமைப்பிடம் துப்பாக்கிகள், வெடிமருந்துகள் என்பன இருப்பதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவிக்கின்றார்.

கிழக்கு மாகாணத்தின் நகரப் பகுதியை மையமாகக் கொண்டு இவ் அமைப்பு இயங்குவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வடமராட்சி கிழக்கில் படையினர் நடவடிக்கை அதிகரிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் படையினரின் நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. கடற்படையினதும் விமானப் படையினதும் ரோந்து நடவடிக்கைகள் இப்பகுதியில் அதிகரித்துள்ளது.

கட்டைக்காடு, வெற்றிலைக் கேணி காம்களுக்கு அருகில் கடற்பகுதியில் கடற்படையின் பாரிய கப்பல்கள் தரித்து நிற்கின்றன. விமானப்படை விமானங்களும் உலங்குவானூர்திகளும் தீவிர ரோந்து நடவடிக்கையைமேற்கொண்டுவருகின்றன. கடற்படையின் பீரங்கிப்படகுகளும் கடலில் ஆங்காங்கேதரித்து நிற்கின்றன.

## மீன்பிடித்தொழிலும் செயலிழப்பு

படையினரின் இத்தகைய நடவடிக்கையினால் வடமராட்சி கிழக்குமீனவர்கள் தொழிலுக்கு செல்லமுடியாத நிலையில் மீன்பிடி முற்றாக செயலிழந்துள்ளது (யோ)

## பரீட்சை நிலையம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. சாதாரணதர பரீட்சை 1994 சங்கீத நடன செய்முறைப் பரீட்சை இன்று முதலாம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதற்கான பரீட்சை நிலையங்களில் ஒன்றான யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில் நடைபெறவிருந்த பரீட்சை யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என யாழ் கல்வி வலயம் 1 கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி கேட்டுள்ளார். (சி) (தி)

## இராணுவ நடவடிக்கைக்கு மக்களின் வாகனங்கள்

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் அண்மையில் இராணுவத்தினர் மேற்கொண்ட ஜயமஹா இராணுவ நடவடிக்கையின் போது வட பகுதிக்கு பொருட்களை ஏற்றி வரும் 93 லொறிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த லொறிகளில் பெரும்பாலானவை பழுதடைந்த நிலையில் இப்போது உரிமையாளர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இதனிடையே வவுனியா. தாண்டிக்குளம். இராணுவத் தடை முகாமில் இருக்கும் படையினர் வடபகுதிக்கு வரும் வாகனங்களை தடுத்து வைத்து தமது தேவைகளுக்காக மாதக் கணக்கில் எவ்வித கட்டணமுமின்றிப் பயன்படுத்தி வருவதாகவும் தெரிய வருகிறது.

அத்துடன் வாகனங்களில் ஏற்படும்பழுதுகளை திருத்தும் வகையிலும், இராணுவத்தினர் நியமிக்கும் சாரதிகளுக்கான சம்பளம் என்ற வகையிலும் வாகன உரிமையாளர்கள் பெரும் தொகைப் பணத்தை இழந்து வருவது குறிப்பிடத்தக்கது

## போஷாக்குவாரம்

[தொல்புரம்]

வலிமேற்கு சங்கானை பிரதேசசெயலகத்தினால்போஷாக்கு வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

மேற்படி போஷாக்கு வாரம் இம்மாதம் 6ஆம் திகதியிலிருந்து 12ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் துரிதகதியில் நடைபெறுகின்றன. இந்நிகழ்வின் போது பாடசாலைகளில் கருத்தரங்குகளும், போஷாக்கு தொடர்பான கண்காட்சிகளும், பாடசாலை மட்டத்தில் கவிதை, கட்டுரை சுவரொட்டி, பேச்சுப்போட்டிகளும், பொதுப்பணி மன்றங்கள் மட்டத்திலும், பாலர் பாடசாலைகள் மட்டத்திலும் தெருக்கூத்து நாடகப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

[14]

Nallur Branch Library

சிந்தனைக்கு

தான் விரும்புவதையே காணும் - தப்பெண்ணம்;
தெளிவாக இருப்பதைக் காண இயலாது.
- ஆப்ரிதோமஸ் டிவியர்.

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 01-06-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 85

## விட்டுக் கொடுப்பிற்கு இதில் எதுவுமில்லை

பௌத்த குருமார்களில் ஒரு பகுதியினரும், சிங்கள இனவெறிச் சிந்தனையாளர்களும் அடிக்கடி போடும் கூப்பாடுகளில் ஒன்று தான் இலங்கையை விட்டால் எமக்கு வேறு எங்கும் இடமில்லை. கடலில் தான் வீழ்ந்து சாக வேண்டும் என்பது. இதையே தற்பொழுது சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவும் மீண்டும் ஒருமுறை கூறியிருக்கிறார்.

''இந்த நாட்டில் நாம் வாழும் உரிமையை இழந்தால், வேறு எங்கும் சென்று வாழ முடியாது: கடலில் குதித்துச் சாக வேண்டிய நிலை தான் ஏற்படும், எனவே நான் இருக்கும் வரை இந்த நாட்டை பிரிக்க இடம் கொடுக்க மாட்டேன்'' என்பதே டி.பி. விஜேதுங்கா போட்டுள்ள கூச்சல் ஆகும்.

பௌத்த பிக்குகள் சரி, சிங்கள இனவாதிகள் சரி, பேரினவாத சிந்தனையுடைய அரசியல் வாதிகள் சரி, போடும் இக்கூச்சல்களில் என்ன அர்த்தம் உள்ளது? இலங்கைத் தமிழ் மக்கள் என்ன சிங்களவர்களின் தாயகத்தையா கோருகின்றார்கள்? அல்லது முழு இலங்கையையும் தம்மிடம் தாரை வார்த்து விட்டு சிங்களவர்கள் வெளியேறிவிட வேண்டும் அல்லது கடலில் குதித்து விட வேண்டும் என்றா கூறுகின்றார்கள்?

தமிழர் கோருவது அவர்களின் தாயகத்தையே தவிர சிங்களவரின் தாயகத்தையோ அன்றி அவர்களின் ஆட்சி அதிகாரத்தையோ அல்ல. இந்நிலையில் தமிழர்களின் தாயகத்தை அங்கீகரிப்பதன் மூலமோ, அன்றி அவர்களின் சுயாட்சியை ஏற்றுக் கொள்வதன் மூலமோ சிங்களவர்கள் இந்து சமுத்திரத்திலோ, அன்றி அரபிக் கடலிலோ விழ வேண்டிய அவசியம் ஏற்படாது. ஒரு இனத்தின் உடைமையையும், உரிமையையும் வழங்குவதால் மற்ற இனத்தின் உரிமைக்கும், உடைமைக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

# நாட்டின் பொது மேம்பாட்டிற்காக மக்கள் தியாகம்புரிய முன்வரவேண்டும்

## தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா பேட்டி

(வாஷிங்டன்)
இனப்பாகுபாடுகள் உச்சகட்டத்திலிருந்த காலகட்டத்தில் 11 வயது முதல் 16வயது வரையிலான இளம் சமுதாயத்தினர் ஆயுதப்பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். ஆகவே அவர்களும் நாட்டின் அரசியல் நடவடிக்கைகள் பற்றிய அறிவினை பெறும் வாய்ப்பை பெற்றனர் இவ்வாறு தென்னாபிரிக்க ஜன திபதி நெல்சன் மண்டேலா தெரிவித்தார்.

அமெரிக்க நியூஸ் வீக் சஞ்சிகைக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார், அப்பேட்டியின் விபரம் வருமாறு;

கேள்வி: நீங்கள் சோசலிச கொள்கைகளை நாடுகின்றீர்களா முதலாளித்துவத்தை விரும்புகின்றீர்களா?

பதில்: நான் இரண்டிற்கும் உடன்பாடானவனல்ல நான் எப்போதும் சோசலிச கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவனல்ல எமது சுதந்திர யாப்பில் ஒரு சரத்து நிலத்திற்கு கீழுள்ள செல்வம் அனைத்தும்மக்களின் சொத்து என்றுள்ளது கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இம்முறையே அனுசரிக்கப்படுகிறது. வங்கி மற்றும் சிலதனிஉடைமைகளைதேசியமயமாக்க வேண்டும் என முன்பு குரல் கொடுத்தோம் என்பதை மறுக்கவில்லை இதை எதிர்த்து எழுந்த குரலுக்கு மதிப்பளித்து அந்த அறைகூவலை நிறுத்தி விட்டோம்

கேள்வி: ஆபிரிக்க தேசிய காங்கிரசில் உள்ள வன்முறை ஆதரவாளர்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ...

பதில்: நாட்டில் நடைபெறும் சம்பவங்களிலிருந்து ஆபிரிக்க மக்களை பாகுபடுத்தி பிரிக்க முடியாது படிப்பின்மை, வறுமை, பசி, தொழில்இன்மை, வீடுஇன்மை என்பவைதான் இன்று எம்முன் உள்ள பிரச்சினைகள் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு விரோதமான எதிரிகள் இவை இவற்றிலிருந்து மீள மக்கள் அளிக்கும் ஆதரவைப் பொறுத்திருக்கிறது எமது வெற்றி என்னை பின்பற்றுபவர்கள் என் அறைகூவலுக்கு செவிசாய்த்து வந்துள்ளனர் எடுத்துக்காட்டாக ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன் ஜனாதிபதி எப் டபிள் யூ.டி கிளேக் கறுப்பின மக்கள் வாழும் சொவேட்டோ பகுதிக்குச் சென்றபோது எமது ஏ என் சி உபதலைவர் சிசுலுவிடம் ஒரு பொறுப்பினை ஒப்படைத்



தேன் கிளேர்க்கின் கூட்டங்களுக்கு எத்தகைய இடையூறும் இருக்கலாகாது என அவரிடம் கோரியிருந்தேன் அது போல் எந்த அசம்பாவிதமும் ஏற்படவில்லை.

கேள்வி: பொதுஉடைமைவாதிகளை அமைச்சரவையில் சேர்த்துள்ளீர்களே?

பதில்: பொதுவுடைமைவாதியோ பழமைவாதியோ என்பது முக்கியமல்ல அவர்கள் ஏ. என். சியின் கொள்கைகளை நடைமுறைகளை ஏற்று இணைந்தவர்கள் காங்கிரசின் கோட்பாடுகளுக்கு ஏற்புடையதாகவே அவர்கள் நடந்து கொள்வர்.

கேள்வி: வெள்ளையர் இதுவரை அனுபவித்து வந்த தனிச் சலுகைகள் நீக்கப்படுமா?

பதில்: எந்த ஒரு தனி இனத்தை சார்ந்த எவரையும் குறிப்பிட்டு நான் தியாகம் செய்யுங்கள் என கேட்கப் போவதில்லை நாட்டின் பொது மேம்பாட்டுக்காக பேதமற்ற வகையில் குடிமக்கள் அனைவரும் தியாகம் புரிய முன்வரவேண்டும் குறிப்பிட்ட அளவு வரியினை சகலரும் நாட்டுக்குத் தரவேண்டும். முதலீடுகளுக்கு முக்கியத்துவமும் ஊக்கமும் தருவதற்காக மிகவும் குறைந்த வரியினையே விதிக்க உத்தேசித்துள்ளோம். கடந்த காலத்தில் நாட்டின் பெரும்பான்மை மக்கள் அனுபவித்த கொடுமைகளுக்காக வெள்ளையர்கள் இன்று தாமாகவே வருந்துவதுடன் பிராயச்சித்தமும் செய்ய முன்வருகின்றனர். தாங்களாகவே முன்வந்து செய்யும் பணிகள் சட்டத்தால் நடைமுறைப்படுத்துவதைவிட நல்ல பலன் தரக் கூடியவை.

கேள்வி: புதிய தென்னாபிரிக்கா அமெரிக்கா தொடர்பாக எப்படி நடந்து கொள்ளும்?

பதில்: நான் சிறை மீண்டதும் முதலில் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அமெரிக்காவிற்கு வரும்படி அழைப்பு விடுத்தவர் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அவரை மூன்று தடவைகள் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. இனப்பாகுபாட்டை நீக்கி அமைதியான முறையில் ஜனநாயகத்தை நிலைநாட்ட அனுதாபத்துடன் செயற்பட்டவர் அவர். இதேபோல் தற்போதைய ஜனாதிபதி பில் கிளின்டன் ஒத்தாசை புரிந்துள்ளார். அமெரிக்காவின் ஒத்துழைப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன்.

## ஐ. ஐ. தே. மு இல் காமினி ஆதரவாளர்களே உண்டு

-திருமதி அத்துலத்முதலி

(கொழும்பு)
ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் செயற்குழு உறுப்பினர்களில்பலர் காமினி திசாநாயக்காவின் ஆதரவாளர்களாவர். இவர்கள் கட்சியை ஐ தே. கவுடன் இணைத்துவிட வழிசெய்கின்றனர் என திருமதி சிறீமனி அத்துலத்முதலி குற்றஞ்சாட்டியுள்ளார். எனினும் கட்சியின் லலித் முன்னணி இதனை எதிர்க்கும் எனவும் எதிரணியான பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் அது கூட்டு வைக்கவே முனையும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்

தமது கணவரின் கொலை ...

...ளது ஆலோசனை பெற்றே மேற்கொள்ளவேண்டும் என வும் அவர் குறிப்பிட்டுள்ளார்

## கட்சிமீது வழக்கு

(கொழும்பு)
ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர்கள் இருவரைக் கட்சியிலிருந்து நீக்கியதைத் தொடர்ந்து கட்சி உறுப்பினர் இருவரும் கட்சி மீது வழக்குத் தாக்கல் செய்யப் போவதாகத் தெரி...

## போட்டி

அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக் கழகம் நடாத்தும் 2ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டிய கிரிக்கெற் சுற்றுப் போட்டித் தொடரின் கால் இறுதிக்கு முந்திய ஆட்டத்தில் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு அரியாலை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அடைக்கல அன்னை விளையாட்டுக் கழகமும் மாலை 4-30க்கு ஐங்கரன் விளையாட்டு கழகத்தை எதிர்த்து சிற்றம்பலம் விளையாட்டுக்கழக அணியும் மோதுகின்றன.

## கடும் மழை

(கொழும்பு)
தெற்கில் தொடர்ந்து பெய்த கடும் மழையினால் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் மேலும் அதிகரித்திருப்ப...

## மனைவியை மீட்பதற்கு கணவன் பொலிசில் சரண்!

மனைவியை மீட்பதற்காக சரணடைந்த கணவனை மீட்குமாறு கோரி ஆட்கொணர்வு மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனைவியை மீட்பதற்காக பொலிசில் சரணடைந்த காங்கேசன் துறையைச் சேர்ந்த குமாரலிங்கம் இப்போது களுத்துறை சிறையில் உள்ளார்.

இவரது விடுதலை தொடர்பாக மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவில் அநுராதபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின்செயலர், களுத்துறை சிறை அத்தியட்சகர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

... கூறப்படவில்லை. சட்ட விரோத செயல் எதிலும் ஈடுபடாதவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்று பிரதிவாதிகள் பதில்தாக்கல் செய்ய இம்மாதம் 7ஆம் திகதிவரை அவகாசம் வழங்கியுள்ளது.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994.6.1 புதன் இரவு
08. 01- குயிலோசை நிகழ்ச்சியில் ''நாட்டுப்பற்றை ஊட்டிநிற்கும் கிராமிய கலைவடிவம்'' - கிராமிய நிகழ்வு
08. 20- ஏர்முனை - 'இழங் கிளிகள்' சித்திரம்
08. 30- செய்திகள்

ஒரு இனத்தின் உடைமையையும், உரிமையையும் வழங்குவதால் மற்ற இனத்தின் உரிமைக்கும், உடைமைக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

இன்று உலகில் சிறுபான்மையினரின் உரிமைகளை வழங்கிய எந்த நாடும் அவ்வாறு கடல்களிலோ, குளங்களிலோ விழுந்ததும் கிடையாது. மாறாக, சுயாட்சி வழங்கல், தாயகத்தை அங்கீகரித்தல் என்பதன் மூலம், அந்நாடுகள் பல பிரச்சினைகளில் இருந்து விடுபட்டுள்ளதோடு இரத்தம் சிந்துவதையும், பெரும் பொருள் நட்டமடைவதையும் தவிர்த்துள்ளன மேலும், நாட்டின் அபிவிருத்திக்கும் உறுதுணையாகவும் இருந்துள்ளன

இதேசமயம், இவ்வாறான சிந்தனை கொண்டவர்களோ, அன்றி அதை மேற்கொள்வதற்கென முரட்டுத்தனமான நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களோ வெற்றி பெற்றதாகவும் இல்லை. மிகவும் பலம் பெற்றுள்ள இராணுவத்தைக் கொண்டுள்ள நிலையில் கூட இஸ்ரேல், முழுமையானதாக இல்லாது விட்டாலும் பாலஸ்தீனரின் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டிய நிலையே ஏற்பட்டது; இதேசமயம் எரித்திரியா போன்ற நாடுகளின் விடுதலையை யார் விரும்பியோ விரும்பாமலோ ஏற்க வேண்டியும் வந்தது.

இவைதவிர, இலங்கையைக் கைவிட்டால் சிங்களவர்கள் கடலில்தான் இறங்க வேண்டும் எனக் கூறுபவர்கள், தமிழர்கள் தமது தாயகத்தைக் கைவிட்டு கடலில் இறங்க வேண்டும் என்றா எதிர்பார்க்கின்றார்கள்? உலகத்தில் தமிழர்கள் பரந்திருக்கலாம். ஆனால் அவர்களுக்கென்று ஒரு நாடு உள்ளதா? அல்லது பெயரளவில் குறிப்பிடப்படும் தமிழ்நாடே இலங்கைத் தமிழர்களை தமது மக்கள் என ஏற்றுக் கொள்கின்றதா? எங்கு சென்றாலும் இலங்கைத் தமிழ்மக்கள் அகதிகளாகவே வாழ்கின்றனர். எங்கும் அவர்கள் சுயாட்சி பெற்ற அரசுகளாகவோ, சுதந்திர நாடுகளாகவோ இல்லை; அகதி அந்தஸ்துப் பெற்ற மக்களாகவே வாழ்கின்றனர். அவர்கள்மீது இன்று திணிக்கப்படும் அழுத்தங்களே அவர்களுக்கு தனி அரசு ஒன்று தேவை என்பதை வலியுறுத்தப் போதுமானதாக உள்ளது.

இந்த நிலையில், இலங்கைத் தமிழ்மக்கள் தமது தாயகத்தை விட்டுக் கொடுப்பது என்ற பேச்சிற்கே இடமில்லை இதேசமயம், சிங்களவர்கள் தமிழரிடம் தமது தாயகம் பறிபோய் விடும் எனக் கூறுவது பெரும் பூச்சாண்டித்தனமுமானதாகும்; இப்பூச்சாண்டியை சிங்களப் பேரினவாதிகள் கைவிடும் வரை இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தீரும் என்பதற்கான சாத்தியமும் இல்லை.

---

அவர் மேலும் குறிப்பிட்டார்

தமது கணவரின் கொலை குறித்து ஒரு விசேட புலனாய்வுப்பிரிவு விசாரிக்கவேண்டும் எனவும் விசாரணையின் பின் இது குறித்த விசாரணைக் குழு ஒன்றை நியமிக்க வேண்டுமெனவும் சிறீமனி அத்துலத்முதலி கேட்டுள்ளார். விசாரணைக்குழு உறுப்பினர் நியமனம் லலித் குடும்பத்தவர்க

---

கட்சி உறுப்பினர் இருவரும் கட்சி மீது வழக்குத் தாக்கல் செய்யப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.

லலித் குழுவின் மிக முக்கியமான எதிரியான பிரேமச்சந்திராவும் அவ் அணியின் தலைவரான பியசிறி கலுகல்லையுமே கட்சி உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

---

பெய்த கடும் மழையினால் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் மேலும் அதிகரித்திருப்பதுடன் ஆறு நீர் மட்டங்களும் அதிகரித்துள்ளன மலையகத்தில் சிறுசிறு மண்சரிவுகள் ஏற்பட்டன. நெலுவ, ஹல்விட்டிகல உடுகம பகுதிகளில் மின்னல் தாக்கி ஆறு பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறை பகுதியில் வீதிகளின் மேலாக வெள்ளம் பாய்கின்றது.

---

கா, சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இம் மனுவில், தடுத்துவைக்கப்பட்டிருப்பவரின் மனைவி வவுனியாவில் இராணுவத்தினரால் கைதாகி அநுராதபுரம் பொலிஸில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். மனைவியை விடுவிக்க இவர் 12.12.93இல் அநுராதபுரம் பொலிஸில் சரணடைந்தார் இதனையடுத்து மனைவி விடுவிக்கப்பட்டார். இவரின் கைதுக்கு காரணம்

---

08. 20- ஏழுமுனை - 'இளங் கிளிகள்' சித்திரம்
08. 30- செய்திகள்
08. 40- நாடகம் - 'வாழ்வு விடியும்'

1994.06.02
வியாழன் காலை

07. 02 மாவீரவணக்கம்
07. 15- விடுதலை கீதங்கள்
07. 30- செய்திகள்
07. 35- பத்திரிகைச் செய்திகள்
07. 40- விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

---

# ரோமலின் போர்த்திறனில் எனக்குப் பெருமதிப்புண்டு

## அமெரிக்க ஜெனரல் ஸ்வார்ஸ்கோப்

(நியூயோர்க்)

'இரண்டாம் உலகப் போரில் கூட்டுநேசப்படைகளுக்கு ஐசன்ஹோவர் தளபதியாகத் தலைமை தாங்கியதுபோல் நானும் வளைகுடாவில் நேசப் படைகளுக்கு தளபதியாகத் தலைமை தாங்கியபோது அது எவ்வளவு கஷ்டமானது என்பதை உணர்ந்துகொண்டேன்'' என வளைகுடாவில் ஈராக்கிற்கெதிரான போரில் நேசநாட்டுப் படைகளுக்குத் தலைமை தாங்கிய அமெரிக்க இராணுவ ஜெனரல் நோர்மன் ஸ்வார்ஸ்கோப் தெரிவித்தார்.

உலகப்போர் தொடர்பான விவரணப் படம் ஒன்றை தயாரித்துவரும் அமெரிக்கத்தொலைக்காட்சியொன்றுக்கு அவர் பேட்டி அளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவிக்கையில் ''1944 ஜூன் 6 ஆம் திகதி இடம்பெற்ற நேசநாடுகளின் நோர்மண்டி படையெடுப்பு சரித்திரத்தில் முக்கிய முடிவைக் கண்ட 15 போர்களில் ஒன்று.

பிரான்சில் நாங்கள் காலடி வைக்காமல் இருந்திருந்தால் ஜேர்மனிக்கெதிரான மற்றைய ஒருபெரும் தாக்குதலை நடத்த மேலும் ஓராண்டு தாமதமாகியிருக்கும் ஜேர்மனியின் இருதயப் பகுதியை தாக்கும் சந்தர்ப்பத்தையும் அதனால் இழந்திருப்போம் இது பாரதூரமான அழிவை ஏற்படுத்தியிருக்கும் ஹிட்லர் ரஷ்யாவுடன் ஒரு இணக்கத்திற்கு வந்திருக்கக் கூடும் அல்லது ரஷ்யர்கள் பிரான்சுடன் ஓர் இணக்கத்திற்கு வந்து ஐரோப்பாவின் பூகோள எல்லையை மாற்றியிருப்பர்.

ஹிட்லரின் டாங்கிப்படை தளபதியான ரோமலின் ஒப்பற்ற போர் திறமையில் எனக்கு பெரும் மதிப்பு உண்டு எமது நோமண்டி படையெடுப்பை தடுக்க ஜேர்மன் பீல்ட் மார்ஷல் ரோமல் மேற்கொண்ட முயற்சியை ஹிட்லர் தடுத்து விட்டார் ஜேர்மனியும் போரில் தோற்றுவிட்டது என்றார் அமெரிக்க ஜெனரல் ஸ்வார்ஸ்கோப்

# லூதர் கிங் கொலையாளியை விடுவிக்க மறுப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்க கறுப்பினத்தலைவர் மார்ட்டின் லூதர் கிங்கை படுகொலைசெய்த குற்றத்திற்காக 99 வருடகால சிறைத்தண்டனையை அனுபவிக்கும் ஜேம்ஸ் ஹேர்ள் ரேயின் (66) தம்மை விடுதலை செய்ய வேண்டும் என்று விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

லூதர் கிங்கை கொன்ற குற்றத்திற்காக 1969 இல் சிறை சென்ற இவர் 99 ஆண்டு சிறைத்தண்டனையில் இதுவரை 25 ஆண்டுகளை கழித்துள்ளார்.

சட்டஅதிகாரிகளால் நிர்ப்பந்திக்கப்பட்டதாலேயே தாம் கொலைக்குற்றத்தை ஒப்புக்கொண்டதாகவும் தாம் ஒரு அப்பாவி எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புகை பிடித்தலைக் குறைக்க இந்தியாவில் சட்டம்

(புதுடில்லி)

புகை பிடிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டமூலமொன்றை கொண்டுவர இந்தியாவின் சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது. இதன்படி பொது இடங்களிலும் குறிப்பிட்ட இடங்களிலும் புகை பிடிப்பது தடுக்கப்படவுள்ளது. இந்த தடையை மீறுபவர்களுக்கு தண்டனை விதிக்கப்படவுள்ளது. அரசாங்க அலுவலகங்கள், பொதுஸ்தாபனங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் புகைபிடிப்பது உத்தேச சட்டத்தின் கீழ் தடைசெய்யப்படவுள்ளது இந்த சட்டமூலம் தொடர்பாக சட்டத்துறை அமைச்சின் ஆலோசனையை சுகாதார அமைச்சு கோரியுள்ளது. உத்தேச சட்டத்தின் கீழ் கல்வி நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகள் உள்ள இடங்களிலிருந்து நூறு மீற்றர் தூரம் வரை புகையிலை தொடர்பான பொருட்கள் விற்பதற்கான இடங்கள் இருப்பது தடுக்கப்படும் எனவும், புகையிலைப் பொருட்கள் தொடர்பான விளம்பரங்கள் கட்டுப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# கரையோரப் பாதுகாப்புக்கு 500 கோடி ரூபா தேவை

(சென்னை)

தமிழ்நாட்டின் கரையோர பாதுகாப்பு உட்பட தமிழக பொலிஸ்படையை நவீனப்படுத்த மாநிலத்திற்கு 500 கோடி ரூபா உதவி தேவை என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மத்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் மாநாடு ஒன்றில் பேசிய அவர் பஞ்சாப், காஷ்மீர் நிலைமைகளை பரிசிலனை செய்யும்போது தடுப்புநடவடிக்கைகளை அதிகரிப்பது நல்லது எனத் தாம் உணர்வதாகவும் குறிப்பிட்டார்.

# பாலஸ்தீன பொலிசார் காஸா சென்றடைந்தனர்

(கெய்ரோ)

பாலஸ்தீன பொலிஸ் படையைச்சேர்ந்த 250பேர் காஸாப் பகுதிக்கு வந்த சமயம் அவர்களை பொதுமக்கள் கரகோஷம் செய்து வரவேற்றனர். இவர்கள் பாலஸ்தீன சுயாட்சி பகுதியில் ஏற்கனவே நிலை கொண்டுள்ள 3600 பொலிசாருடன் சேர்ந்துகொள்வர்

# காமினியின் ஊழல் குறித்த ஆவணம் எதிர்ப்பாளர்கள் வசம் சிக்கியதாம்

(கொழும்பு)

காமினி திசாநாயக்கா தொடர்பாக இரகசிய தகவல் அடங்கிய கடிதங்கள் மற்றும் ஆவணங்கள் காமினியின் எதிரணிக்கு கிடைத்துள்ளதாக 'ராவய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தனக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்புகளை தற்காலிகமாக மூடி மறைத்து அரசாங்கத்தில் உட்புகுந்தபோதும் தொடர்ந்து அரசாங்கத்தில் பலம்வாய்ந்த ஓர் அணியாகவே காமினி எதிர்க் குழுவினர் செயல்படுகின்றனர்.

இவர் முன்னர் அமைச்சராக இருந்தபோது செய்த ஊழல், மற்றும் அதிகார துஷ்பிரயோகம் போன்றவை தொடர்பாக இவ் இரகசிய தகவல்கள் இருப்பதாகவும் இதனை விசேட ஜனாதிபதி கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளும்போது சமர்ப்பிக்க இருப்பதாகவும் மேலும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதேவேளை காமினி திசாநாயக்கா பற்றிய மேற்படி இரகசிய தகவல்கள் அடங்கிய கடிதங்கள் மற்றும் ஆவணங்கள் என்பன மிகவும் இரகசியமான முறையில் வைக்கப்பட்டிருப்பதால் இவற்றை காமினியால் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலை தோன்றியிருப்பதாக தெரிய வருகின்றது.

இவற்றை கட்சி உயர்பீடம் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்காக காமினி திசாநாயக்கா அரசாங்க கட்சி முக்கியத்தர்கள்மீது கோபம் கொண்டு இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொத்மலைத் திட்டம் தொடர்பான ஊழல், கொழும்பு பௌத்தலோக மாவத்தை சர்வதேச பாடசாலைக்கான கட்டடக் கொள்வனவு உட்பட முக்கிய விடயங்கள் தொடர்பான ஆவணங்கள், இது தொடர்பாக கருத்து பரிமாறிய கடிதங்கள் என்பன தற்போது வெளியாகியுள்ளன.

இதற்கு மத்தியில் அமைச்சரவை தீர்மானத்தின்படி 1991-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் குற்றப்புலன் விசாரணைப் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சந்திர ஜயவர்த்தன, காமினி திசாநாயக்கா தொடர்பாக நடத்திய விசாரணை குறித்த அறிக்கை என்பன கிடைக்கப்பட்டுள்ளது என அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

---

## அறிவித்தல்

இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் ஆலய திருவிழாக்கால கடைகள் வழங்குதல் 01-06-94 புதன்கிழமை (இன்று) மாலை 3.30 மணிக்கு ஆலய வெளி வீதியில் நடைபெறும்.

(8438) நிர்வாகம்

---

## தவறிவிட்டது

கடந்த 30-5-1994 அன்று தங்கம் இரண்டரைப் பவுண், கைச் சங்கிலி முக்கால் பவுண், (2 துண்டுகள்) பிரபாச் சங்கிலி முக்கால் பவுண், கொடி முகப்பு ஒரு சோடி, சுரை ஒரு பவுண். மேற்பட்ட பொருட்கள் எனது வியாபார நிலையத்தில் வியாபார நேரத்தில் தவறி விட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து கீழ் குறித்த முகவரியில் ஒப்படைக்கவும்:

வாணி நகை மாளிகை
பிரதான வீதி, பருத்தித்துறை
(சி 9568)

---

## மாணவர் எழுச்சி நாள்
## யூன் - 5

கல்வி என்பது மாணவர் விழிகள்
கற்க வழிசெலின் திறந்திடும் வழிகள்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
நல்லூர்க் கோட்டம் யாழ் / நாயன்மார்கட்டு
(8439) மகேஸ்வரி வித்தியாசாலை

---

## வட இலங்கை சுதேச வைத்திய சபையின் விசேட பொதுக் கூட்டம்

வட இலங்கை சுதேச வைத்திய சபையின் பொதுச் சபையை வலுவூட்டுவதற்கான யாப்பினை உருவாக்கி ஸ்திரமான இயக்குனர் சபையை ஏற்படுத்தி இலங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் நிர்வாகத்தை

---

### வடக்கு

ஜே.வி.பி உறுப்பினர்கள் இன்னும் உயிருடன் இருப்பதாகவும் இவர்களுக்கு புனர்வாழ்வு கொடுத்து இவர்களை சமுதாயத்தில் மீண்டும்வாழக் கூடிய நிலையை உருவாக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்

### வியாழன்

---

## பரிசில் வழங்கல் வைபவம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடாத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டி உற்பத்தி எழுச்சிவார போட்டிகளில் தீவக கோட்டத்தில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு வைபவம் நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இன்று இரவு 7.00 மணிக்கு இடம் பெறும்.

## இன்று ஒப்படைக்கவும்

தமிழ்மொழி, கலைத்திறன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணாக்கருக்கான சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் தமிழ் மொழி, கலைத்திறன் போட்டிகளைத் தங்கள் கல்விக் கோட்டங்களிலே நடத்தி முடித்த பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் முடிவுகளைப் பட்டியற்படுத்தி இன்று பிற்பகல் மூன்று மணிக்கு முன்னர் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையில் ஒப்படைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

## கருத்தரங்கு

உலக சூழல் தினத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் சூழல் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்குகள் கோட்ட ரீதியாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது இந்தவகையில் இன்று வடமராட்சிக் கோட்டத்தில் மாலிச் சந்தி சின்னத்தம்பி மகாவித்தியாலயத்திலும் 2ம் திகதி வியாழக்கிழமை தென்மராட்சிக் கோட்டத்தில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும் 3ம் திகதி வெள்ளிக்கிழமை வலிகாமம் கோட்டத்தில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் 4ம் திகதி சனிக்கிழமை தீவகக் கோட்டத்தில் பண்டிதர் குடியிருப்பிலும் மாலை 3மணிக்கு நடாத்த ஏற்பாடாகி உள்ளது.

---

### இனப்பிரச்சனை

இதேவேளை வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு காமினி மூலம் ஒரு தீர்வைக் காணலாம் என ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா முழுமையாக நம்புவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

---

### விசேட

கடந்த ஞாயிறன்று அதிகாலை மூன்று முப்பது மணியளவில் சுற்றி வளைத்த விசேட அதிரடிப் படையினர் பொது மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டிக் கூட்டிச்

---

> ஏர்வரிசை கண்டு ஏற்றமுடன் வாழ்ந்த இனம்
> சீர் வரிசை கேட்டு சேற்றினிலே விழலாமா?

---

# பாதுகாப்பு அமைச்சு செயலாளராக ஆஷ குணவர்த்தன நியமனமாகலாம்?

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக முன்னாள் பிரிகேடியர் ஆஷ குணவர்த்தன நியமிக்கப்பட இருப்பதாகத் தெரிய வருகின்றது.

காமினி திசாநாயக்கா தேசிய பாதுகாப்பு பிரதி அமைச்சராக நியமனம்பெற்றவுடன் இம்மாற்றம் நடைபெற இருப்பதாகவும் மேலும் தெரிய வருகின்றது.

மேலும்காமினிதிசாநாயக்கா மகாவலி அபிவிருத்தி காணி அபிவிருத்தி அமைச்சராக இருந்த போது அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக ஆஷ குணவர்த்தன கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது

---

## விக்கிரம வீரசூரிய - கூரே நீண்ட பேச்சுவார்த்தை

(கொழும்பு)

திட்ட அமுலாக்கல் அமைச்சின் புதிய செயலாளரான கலாநிதி விக்கிரமவீர சூரிய சென்ற வாரம் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரேயை சந்தித்து நீண்ட நேரம்பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

கூரேயிடம் இருந்து பொதுச் செயலாளர் பதவி பறிக்கப்பட்டதற்கும் தனக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை என்றும் இது விடயமாகத் தன்னுடன் கலந்து ஆலோசனை செய்யவில்லை என அவர் கூரேயிடம் தெரிவித்துள்ளார்.

---

### இரு நேரமாக

காரணமாகத் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பல அமர்வுகளில் இரு நேரமாகப் பாடசாலைகளை நடாத்துவது பற்றிக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. ஏற்கனவே தென்மராட்சிப் பாடசாலைகளும் மற்றும் சிலபாடசாலைகளும் இரு நேரமாகவே இயங்கி வந்தன. அவற்றின் செயற்பாடுகளினால் ஏற்பட்ட நல்ல அடைவுகளைக் கருத்திற் கொண்டு; கல்வி வலயங்களின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைவாக வலயம் இரண்டில் கடந்த ஒரு மாதமாகவும், வலயம் ஒன்றில் கடந்த இரண்டு வாரமாகவும் இரு நேரமாகப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன இந்த நடை முறைக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் எல்லோரையும் ஒருமனதாகச் செயற்படுமாறு கேட்டுக்கொள்வதுடன், நடைமுறைச் சிக்கல் ஏதும் இருப்பின் உரியவர்களுடன் கலந்துரையாடிக் கருத்தொரு

---

## தமிழ்மொழி போட்டிகள்

சங்கானைக்கல்விக் கோட்ட பாடசாலைகளின் தமிழ் மொழி கலைத்திறன் போட்டிகள் இன்றும், நாளையும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் பிற்பகல் 1மணியளவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு ப. விக்கினேஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

இன்று பிரிவு இரண்டிற்கான சகல போட்டிகளும் நாளை பிரிவு மூன்றிற்கான சகல போட்டிகளும் தவறாது நடைபெறுமென கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தம் அவர்கள் தெரிவித்தார்கள்

---

## கரபந்தாட்ட போட்டி

யாழ் மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் கரபந்துச் சுற்றுப்போட்டியில் 17 வயதுப் பிரிவினருக்கான அரைஇறுதிப் போட்டிகள் இன்று அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்

இப் போட்டியில் ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து சென் ஜோன்ஸ் கல்லூரியும், மத்திய கல்லூரியை எதிர்த்து புனித ஹென்றியரசர் கல்லூரியும் விளையாடும்

## மிதிவெடியில் காலிழப்பு

வவுனியா ஈச்சங்குளம் என்னும் இடத்தில் உள்ள காட்டுப் பகுதியில் தடி வெட்டச் சென்றவர் மிதி வெடியில் சிக்கி ஒரு காலை இழந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை நடைபெற்ற இச்சம்பவத்தில் கே. வேலாயுதபிள்ளை (வயது 36) (புதுக்குடியிருப்பு) என்பவரே மிதி வெடியில் சிக்கி காலை இழந்தவராவார்.

இவர் நேற்று இரவு சிகிச்சைக்கென யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்

(பா.நி)

---

## மரண அறிவித்தல்கள்

**Arthur Ganeshapillai Joseph**

(Retd. P. T. I.)

ஆதர் கணேசபிள்ளை ஜோசப்

சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் நிர்வாகத்தை நிர்வகிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டம் 05-06-94 ஞாயிறு காலை 9.30 மணியளவில் இலங்கா சித்தாயுர்வேத மருத்துவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

வைத்தியப் பெருமக்கள், கல்லூரியின் பழைய மாணவர்கள், சித்தாயுர்வேத அபிவிருத்தியில் ஆர்வமுள்ளவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

Dr. பொ. இராமநாதன்
கௌரவ செயலாளர்

31-05-94

(8437)

---

வாலையம்மன் விளையாட்டுக் கழகம் நடாத்தும்

## மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டிகள் 1994

(1) 7 பேர் கொண்ட 6 ஓவர் மென்பந்து கிரிக்கட் போட்டி. (15 வயதிற்குட்பட்டோருக்குரியது. அனுமதிக்கட்டணம் - 50/-)

(2) 7 பேர் கொண்ட 10 ஓவர் மென்பந்து கிரிக்கட் போட்டி. (அனுமதிக் கட்டணம் - 75/-)

மேற்படி போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் 10-6-94 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு முதல் பின்வரும் இடங்களில் பதிவு செய்து கொள்ளவும்.

(1) அறிவகம் புத்தகசாலை
வெலிங்டன் சந்திக்கருகாமை யாழ்ப்பாணம்

(2) சாம்சிவா மல்ரி சொப்
செல்லக்கிளியம்மான் நினைவாலயம் முன்பாக கல்வியங்காடு.

★ கழகத் தெரிவுகள் 11-6-94 மாலை 4.30 மணிக்கு நிலையத்தில் நடைபெறும்.

வாலையம்மன் வி. க.
வாலையம்மன் ச. ச. நிலையம்
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

**விளையாட்டுக் கழகத்தினர்**

விளம்பர அன்பளிப்பு:-
திருமாட்டி (சீமாட்டி)
(புடைவைக் கடல்)
122 மி. நி. வீதி, யாழ்ப்பாணம். (8436)

---

### வியாமுன்

அலுவலர்க்கான செயலங்களும் திறந்திருக்கும் என்னை பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத்தருகின்றனர்

### கொடி

உதவுமாறும் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் அன்புடனும் உரிமையுடனும் கேட்டுக்கொள்கின்றனர்

### உபாலி

ஒப்பந்தம் முன்னரே செய்யப்பட்டுள்ளதாகவும் இதன் அடிப்படையில் தாம் கைது செய்யப்பட்டவருடன் நடத்திய பேச்சுக்களின் விபரங்களை வெளியிட தேவையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேவை ஏற்படடால் மீண்டும் ஒருமுறை தான் சொத்தி உபாலியை சந்திக்க இருப்பதாகவும் முன்னர் தான் ஒரு முறை அல்லது இரு தடவைகள் உபாலியை சந்தித்ததாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

### பாதாள

வேளைமேலும் பல பாதாள உலக குற்றவாளிகள் அரசியல் வாதிகளின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலும் தனிப்பட்ட வீடுகளிலும் தலைமறைவாக வாழுகின்றார்கள் என பொலிசார் கூறுகின்றனர்.

---

ஒன்று திரட்டிக் கூட்டிச் சென்று அனைவருக்கும் வடர்களால் அடித்துவிட்டு, பின்னர் ஒவ்வொரு குடும்பத்தினரிடமிருந்தும், ரூபா 100 தொடக்கம் ரூபா 250 வரையிலன பணத்தை அபகரித்துச் சென்றுள்ளனர்.

### சுகாதார

டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சுகாதார அமைச்சுக்குச் சொந்தமான பல வாகனங்கள் பாவனைக்கு உதவாதவை எனக் கூறப்பட்டு விற்பனை செய்ய திட்டமிடப்பட்ட விடயமும் தற்போது தெரியவந்துள்ளது.

சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத்தை பதவியிலிருந்து நீக்க ஜனாதிபதி ஆலோசித்து வருவதை தொடர்ந்தே இவ் ஆவணங்கள் வெளிவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

---

**யாழ். ஸ்ரீதரில்**
புரூஸ்லி நடித்த
**GAME OF DEATH**
தினசரி பி. ப. 4 00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு காலை 10 30 மணி
பி. ப. 4 மணி, 6 மணி
தினசரி பி ப. 2 30 மணி காட்சி மட்டும்
ஏப்ரல் 94
ஒளிவீச்சு
(சி-9567)

---

கலந்துரையாடிக் கருத்தொருமைப்பாடு பெறும்படி தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை சம்பந்தப்பட்ட அனைவரையும் வேண்டிக் கொள்கின்றது. என தெரிவிக்கப்பட்டுள்ளது

### வடமராட்சி

குண்டு வீச்சு விமானம் ஒன்று வடமராட்சி வடக்கு கிழக்கு பகுதிகளை வட்டமிட்டு நோட்டமிட்டது, பலாலியில் இருந்து வந்த இவ்விமானம் பின்னர் ஆனையிறவு நோக்கிசென்றது

மற்றும் வலிகாமம் வடக்குப் பகுதிகளை நோக்கி பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று நண்பகல்வரை பலத்த ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் ஏவப்பட்டன.

(யோ)

### மேலதிக

காப்பு செலவினம் தொடர்பாக வரவு-செலவு திட்டத்தில் 2200 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது மேலதிகமாக யுத்த செலவாக 150கோடி ரூபா இதற்கு முன்னர் ஒதுக்கப்பட்டுள்ளது

எனவே பாதுகாப்பு அமைச்சு கேட்ட 1100 கோடி ரூபாவை ஒதுக்கினால் 1994 இல் பாதுகாப்பு செலவு 3300 கோடி ரூபா என்பது குறிப்பிடத்தக்கது

1993 ஆம் ஆண்டு பாதுகாப்பு மொத்த செலவு 2078 கோடிரூபாவாகும்

---

## ஆதர் கணேசபிள்ளை ஜோசப்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாக கொண்டவரும், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியருமான ஆதர் ஜோசப் அவர்கள் 31-5-94 அன்று காலமாகிவிட்டார். அன்னார் செல்வதேவி (Retd Creeder Post Office) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி ஞானதீபம் காப்பென்ரர், திருமதி செல்வரட்ணம் ஹெலன் ஜோசப் (கொழும்பு) ஆகியோரின் அருமைச் சகோதரரும், இராஜகுலசிங்கம் (கொழும்பு), நவநாதன் (கோண்டாவில்), திருமதி ஜெயதேவி ஜேசுதாசன், திருமதி புஷ்பதேவி அருளணராஜா (மட்டக்களப்பு); டேவிட் ஜெயராஜா (லண்டன்), D C. பாலராஜா (கனடா), ஜோர்ஜ் தேவராஜா (லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார் அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று புதன்கிழமை 01-06-94) மாலை 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்துக்காக கொட்டடி தேடித்த சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
திருமதி செல்வதேவி ஜோசப்
(மனைவி)

199/1, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (8434)

---

## திருமதி கஜமுகதேவி கனகசபை

(ஆவரங்கால்)

திருமதி கஜமுகதேவி கனகசபை காலமானார் இவர் ஆவரங்கால் கனகசபை தருமலிங்கம் கனகசபையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பையா, சிவசுப்பிரமணியம் (தோம்பிள்ளை), விசாலாட்சிப்பிள்ளை ஆகியோரின் மூத்த புதல்வியும், பங்கைஜன், இந்து, சசிகலா, பத்திரா, நடசபேசன் ஆகியோரின் அருமைத்தாயாரும், கஜமுகதேவன், சத்தியபாமா, ருக்குமணி ஆகியோரின் சகோதரியும், நிவேதிதனின் பாட்டியாரும், சந்திரவதனி அம்மாள், கிருஷ்ணராசா (கிராம அலுவலர் உரும்பராய்) ஆகியோரின் மைத்துனியும், பத்மாவதியின் மாமியும் ஆவார் அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (01-06-94) புதன் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொய்வளை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்
C. T. கனகசபை

ஆவரங்கால்
(8440)

---

**குப்பிவிளக்கிலும் குனிந்து படிப்போம்**
**கம்பும் இருளிலும் துணிந்து நடப்போம்**

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டுஜூன் மாதம் 01 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது